# ஞானபோதினி.

ஸம்புடம். IV] } 1901௵ பிப்ரவரி௴ 20௳ {புத்தகம். 7.


## விக்டோரியா சக்ரவர்த்தினியார்.

ஆங்கில நாட்டார்க்குப் பேரும் புகழும் பெரு வாழ்வும் வந்தது முக்கியமாய் இரண்டு காலங்களிலென வொருவாறு சொல்லல் கூடும். இவ்விரண்டு தடவைகளிலும் அந்நாட்டை அரசு செலுத்தி வந்தவர் பெண்பாலார். இவ்விருவரில் ஒருவர் பதினாறாம் நூற்றாண்டினிறுதியில் இராஜ்ஜியபாரஞ் செய்த எலிஜபெத் மகாராணியவர்கள். மற்றவர் பெயர் இந்நாட்டார்க்கும் எந்நாட்டார்க்கும் சொல்லாமலே விளங்கக்கூடியது. ஆங்கிலேயர் பரதகண்டத்திற் கால் வைக்கத்தலைப்பட்டது முன்னவர் காலம். இக்கண்ட முழுதும் தம்முடையதென்று துவஜம் நாட்டி இந்நாட்டுச் சிற்றரசர்களை யெல்லாங் கூட்டித் தாம் இந்திய சக்ரவர்த்தினி யென்னும் பெயர் பூண்டது விக்டோரியா வென்னும் மாதரசி; ஆதிகாலத் ஆங்கில அரசரிற் பிரபலமான * அல்பிரட் என்பவரது 38-ஆவது சந்ததியார். இவர் எலிஜபத் மகாராணிக்குப்பிறகு அரசு செலுத்தி வந்த எட்டு அரசர்களுக்குப் பின் றோன்றி அரசு புரிந்தனர். சென்ற நூற்றாண்டில் 1819௵ மே௴ 24௳ லண்டன் பட்டணத்திற் கென்ஸிங்டன் என்னும் அரண்மனையில் மூன்றாவது ஜியார்ஜ் என்னு மரசருடைய நான்காவது புத்திரராகிய † கென்ட் என்பவர்க்கு விக்டோரிய மேரியாவினிடம் வலம்புரியினிடமாகப் பிறந்த முத்தைப் போன்று பிறந்தது ஒரு குழந்தை. இக்குழந்தைக்குத் தாயாருடைய பெயரும், ருஷியா சக்கிரவர்த்தியினுடைய விருப்பத்தின்பேரில் அவர் பெயரும் சேர்த்து அலெக்ஸாண்ட்ரினா விக்டோரியா என்னும் நாமகரணம் செய்யப்பட்டது. தந்தையின் குணமும் தாயின் வனப்பு மோருரு வெடுத்துவந்த தன்னது இக்குழந்தை. மூன்றாவது ஜியார்ஜ் என்பவருடைய புத்திரர்களில்

---

* Alfred the Great, 871—901 AD.    † Duke of Kent.

விக்டோரியாவின் பிதா அதிக நற்குணமும் நன்னடையுமுடைய வர். அந்நாடு முழுதும் அவரைத் தாய் தந்தையரைப்போற் பாவித்துவந்தது. அத்தகையகுணம் வாய்த்திருந்தவர்க்குப் பிறந்த பெண்ணும் அவரினும் மேம்பாடுடைய குணமும் நடையும் பிறவும் உடையளாயிருந்தன ளென்பது அப்போதே ஒருவாறு புலப்பட்டது. தாயாரும் ஜெர்மனிதேசத்துப் பிரபுக்களில் அதிக பிரபலமுள்ளவர்களி லொருவருடைய குமாரத்தி. பெல்ஜிய நாட்டரசராய **லியோபால்ட்** என்பவருடைய சகோதரி. முதற்புருஷ னிறந்த பிறகு அந்தச்சாதியாருடைய வழக்கத்திற்கு விரோதமில்லாத படியினுல், **கேண்ட்** என்பவரை இரண்டாவது புருஷனுகக்கொண்டாள். இவளும் பல நற்குணங்கள் வாய்க்கப்பெற்றவள். விக்டோரியாவை நன்னடையிற் பழக்குவித்துக் குடிகளிடத்துத் தான் வைக்க வேண்டிய விசுவாசம், காருண்யம் முதலியன காட்டுவித்தவள். தகுந்த வயதானதும் இக்குழந்தைக்கு வித்தியாப்பியாசம் செய்வித்து மற்ற சடங்குகளும், நிறைவேற்றினுர்கள். குழந்தையும் நாளுக்குநாள் கல்வி, குணம் இவற்றில் அதிக அபிவிருத்தி அடைந்துகொண்டே வந்தது. குழந்தைப் பருவத்திலேயே இக்குழந்தை தன் தந்தையை இழக்கவேண்டி வந்தது. தாயாரும் தன் அம்மானும் இக்குழந்தையை அதிக கவலையோடு பாதுகாத்து வந்தார்கள். அதிக செல்வத்தி லிருந்தபோதிலும் குழந்தையைத் தான்போனபடி விடாமற் காலையிலெழுந்து காலைக்கடன் முடிப்பதுமுதல் இரவு நித்திரை போம்வரைக்கும் இன்னின்னமாதிரி பொழுதுபோக்கல் வேண்டுமென்று செய்த ஏற்பாட்டின்படியே யாவும் நடந்துகொண்டுவந்தன. அக்காலத் தரசராயும் தனக்குப் பெரிய பிதாவாயுமிருந்த நான்காவது **ஜியார்ஜ்** என்பவர் தன்னிடத்தில் வைத்த அன்பிற் கறிகுறியாய் நவரத்தினங்களு மிழைத்த தன் னுருவமைந்த படமொன்று தந்தார். படிப்பிற்குரிய செலவின் நிமித்தம் வருஷந்தோறும் 60,000 பவுன் அல்லது சுமார் ஒருலக்ஷ ரூபாயும் கொடுத்துவந்தார். வித்தியாப்பியாசமான ஆறுவருஷத்திற்குள் ஜர்மன் பாஷையும் பிரஞ்சு பாஷையும் நன்றுய்ப் பேசும் படியான சாமர்த்தியமும், லத்தீன்பாஷையிற் பிரபலகவிகளாய **வர்ஜில், ஹோரஸ்** என்பவாகளாற் செய்யபட்ட காவியங்களை வாசித்தறிந்துகொள்ளக்கூடிய திறமையு முண்டாயின. அங்ககணி

தம், பீஜகணிதம், க்ஷேத்திர கணிதம் என்னு மிவற்றிலும் போது மான விற்பத்தி உண்டாயிற்று. சங்கீதத்திலும் சித்திரவேலையிலும் அதிக ஆவலுடையளாயினள். தன்வயதொத்த குழந்தைகள் கூட விருந்து பொழுதுபோக்குவதற் கில்லாம லிருந்தது மாத்திரம் குழந்தைக்குக் கொஞ்சம் வருத்தமாயிருந்தது. இளம்பிராயத்திலும் தன்னயங்கருதாது பிறர் நன்மையையே நாடவேண்டு மென்னும் எண்ணம் இயற்கையிலும் செயற்கையிலும் உடையளாயினள். இதற்கனேக திருஷ்டாந்தங்கள் உள. தான் இன்னாரென அறிந்துகொள்ளாதபடி உடை உடுத்துப் பற்பல கடைகளுக்குப்போய்ப் பலதினுசுகள் தான் வாங்குவதும் பிறர் வாங்குவதைக் கவனித்துப் பார்ப்பதும் உண்டு. இப்படி நடந்துவந்த ஒருநாள் ஒருஸ்திரீ ஒரு ஹாரத்தைத் தான்வாங்க விரும்பி வியாபாரியை அதன்விலை யாதென விசாரிக்க அவன் ஒருவிலை சொன்னான். அதற்குத் தகுந்தபணம்தன்னிடத்தில்லாததனுல் அவனைமறுபடியும் அதற்கும் குறைந்தவிலைக்குக் கொடுக்கப்படமாட்டாதோவென வினவலும் அவன் முடியாதென்றவுடனே அவள் அறிவுடையவளாதலின் 'கிட்டாதாயின் வெட்டெனமற' வென்பதற்கிணங்க அதனிடத்திருந்த விருப்பத்தை ஒழித்துத் தன் சக்திக்கேற்ற வேறோர் ஆபரணம் வாங்கி வீட்டிற்குச் சென்றனள். இவற்றையெல்லாம் கவனித்திருந்தாள் விக்டோரியா. அந்த ஸ்திரீயினுடைய அறிவுக்கு வியந்து அவள் போன பிறகு வியாபாரியினிடம் அவளின்னாரெனத் தெரிந்துகொண்டு அந்தஹாரத்தைத்தான் பணம் கொடுத்து வாங்கி ஒரு கடிதம் வரைந்து அவளுக்குக் கடிதமும் ஹாரமும் அனுப்புவித்தாள். பெண்ணாய்ப் பிறந்தும் மற்றப் பெண்களைப்போல அவா வென்பதற்குடையாது அளவுக்கு மிஞ்சிச் செலவு செய்தாயினும் தானாவது வாங்கவேண்டும் அல்லது தன் புருஷனாவது தனக்கு வாங்கித்தரல் வேண்டும் என்று 'மூர்க்கனும் முதலையும் கொண்டதுவிடா' வெனப்பிடித்துக் கடன் வாங்கியாவது நகை செய்வித்துக் கொள்ளல் வேண்டுமென்னும் எண்ணம் விட்டு எல்லாவற்றையும் சீர்தூக்கிப் பார்த்து நடந்ததற்கு வியந்து தான் வாங்கியனுப்புவித்த தென்பதுதான் அக்கடிதத்திலடங்கிய விஷயம். இந்திய நாட்டில் அனேக ஸம்சாரங்கள் அழிவதற்குக் காரணம் அந்த ஸ்திரீக்கு இருந்த அறிவுதமக்கில்

லாமையல்லவா? அவ்வறிவு இருந்ததற்காக அல்லவா விக்டோரியா மாதாசி அதிகமாகவியந்து அம்மாதிரி நடப்பித்தனர்? இதைப்போன்று பிறர் நயத்தைநாடி நடந்த அநேக சந்தர்ப்பங்கள் இன்னும் உள. தனது தாய்தந்தையர் அன்புபாராட்டி வந்தவர்களிடத்தில் தானும் அப்படியே யிருத்தல் வேண்டுமென்பது அவளுடைய எண்ணம். நடையும் அதற்கியைந்தது. தன் தகப்பனர் வெளியூர்க்குப் படையெடுத்துச் சென்றபோது அவர் தம் சேனை கலகம்செய்து தீங்குவிளைக்க யத்தனித்தபோது ஹில்மன் என்னும் பேருடைய ஒருபதாதி தான் தன் தானையிலுண்டான குழப்பத்தை அடக்கி ஜயமுண்டாதற்கு வேண்டியவற்றைச்செய்து வந்தான். தம்நாடுசேர்ந்ததும் அவன் வயோதிக பருவத்தை யுத்தேசித்துத் தமதரண்மனைக் கருகில் ஒரு சிறு வீடு கட்டிக்கொடுத்துக் காப்பாற்றிவந்தனர். சில காலம் சென்றதும் அவனிறந்துவிட்டான்; அவனுடைய மனைவியும் நோயாளியான குழந்தைகளுமிருந்தன. தன் தந்தையாரிறந்த பின்னரும் அவர்களுக்குளவ்வளவோ உதவி செய்து வைத்தியர்களைக்கொண்டு சிகிச்சை செய்துவந்தனள் நமது மாதரசி. தனக்குப் பட்டாபிஷேகமானதும் அவ்விடம் விட்டு வேறோர் அரண்மனைக்குச் செல்லவேண்டிவந்தது. நோயாளியாயிருந்த பெண்ணுக்குத் தான் ஒரு பைபில் (கிறிஸ்துவேத புஸ்தகம்) வாங்கி அவள் வாசித்து மனசுக்கு அமைதி யுண்டாம் பொருட்டு அனுப்புவித்தனள். தானரசியாயும் தன் சிநேகிதர், ஏழைகள் என்னு மிவர்களிடத்துவைத்திருந்த விசுவாசத்திற்கோரளவில்லை. "தொன்மை மறவேல்" என்பதை எப்போதும் மறந்தாளல்லள். வாய்மை, பொறை, அன்புடைமை, அருளுடைமை, ஈகை இன்னும் இவைபோன்ற குணங்களெல்லாம் வாய்க்கப்பெற்றது தனக்கும் பிறர்க்கும் இகத்திற்கும் பரத்திற்கு மிக்க உதவியாயிருந்தது.

விக்டோரியாவுக்குத் தன் பத்தாவது வயதுவரைக்கும் தனக்கும் சிம்மாசனத்திற்கும் அவ்வளவு சமீபமென்பது தெரியாது. பிறகோர்நாள் வமிசாவளியைப் பார்த்துத் தெளிந்து தன் உபாத்தியாயரைக் கேட்க அவர் "ஆம், மெய்தான், நீ இதினும் முன்பு அறியவேண்டுவது அநாவசிய மென்று அவ்விஷயம் உனக்கெட்டாதபடி வைக்கப்பட்டது" என்னலும் அக்குழந்தை "ஒருவேளை

நான் அகங்கரிப்பே னென்பதற்காக அம்மா அவர்கள் இப்படி ஏற்பாடு செய்திருக்கலாம். சில குழந்தைகள் தங்களுக்கு வரும் உயர்ந்த அந்தஸ்தைக்குறித்துப் பெருமைபாராட்டிக் கொள்ளக்கூடும். ஆனல் எனக்கு அம்மாதிரியான எண்ணம் உண்டாகவில்லை. அதை நினைக்கநினைக்க ஒருவிதமான அச்சமும், அப்பதவிக்குரிய கடமைகளைச் சரியாய்ச்செய்து முடிப்பதற்குக் கடவுள் எனக்குத் தைரியமும் புத்தியும் கொடுக்கவேண்டுமே என்னும் ஏக்கமுந் தாம் மேவிடுகின்றன. ஆயினும் என்னுலியன்றவளவில் என்னுடைய குடிகளுக்கும் உறவினர்க்கும் மற்றெவர்க்கும் நன்மையே நாடுவேன். எல்லாம் வல்ல முழுமுதற்கடவுள் இதுவிஷயத்தில் எனக்குத் துணைசெய்வாராக" என்றனள். அக்குழந்தையின் புத்தி கூர்மையேகூர்மை.

அந்த வருஷத்திலேயே அரசுபுரிந்துவந்த நான்காவது ஜியார்ஜ் காலஞ்சென்றுவிட்டனர். அவர்க்குப்பிறகு அவருடைய சகோதரர் நான்காவது **வில்லியம்** என்ற பட்டத்துடன் சிம்மாசனத்திற்குவந்தார். இவரும் தனது தம்பி புத்திரியின்மீது அதிக விசுவாசம் வைத்திருந்தார்.

1836௵ மே௴ விக்டோரியாவினுடைய அம்மானும் ஆல்பர்ட், அர்னேஸ்ட் என்னும் அவர் குமாரர்களும் **லண்டன்** பட்டணத்திற்கு வந்தார்கள். அப்போதுதான் நங்கையர் சிகாமணி தனக்குரிய நாயகனை முதற்றரம் கண்ணுற்கண்டது. அவர்களிருவரில் இளையோனுகிய ஆல்பர்ட் என்பவன் பேரில் தான் இவள் நாட்டம் விழுந்தது. அவர்கள் சிலநாள் அங்குத் தங்கியிருந்து பிறகு தங்களுடைய நாட்டிற்கேகினுர்கள்.

1837௵ மே௴ 24 தேதியானதும் அந்நாட்டுச் சட்டப்படி அவளுக்கு யுக்தவயது வந்ததாக எண்ணப்பட்டு அவள் அரசுக்குரியாளெனவும் மதிக்கப்பட்டனள். அதேவருஷம் தனது பெரியபிதாவான **வில்லியம்** என்பவர் காலஞ்சென்றுவிட்டனர். அந்நாட்டு வழக்கப்பிரகாரம் விக்டோரியாவுக்கு இந்தச் சமாசாரம் தெரிவிக்கும்பொருட்டு ஆங்கிலநாட்டுப் *பெரியபாதிரியாரும் இன்னுஞ்சில பெரியமனுஷர்களும் இளவரசியாரிருந்த அரண்மனைக்குவந்து பொ

* Archbishop of Canterbury.

பூது விடிவதற்குச் சற்றுநேரமிருந்ததுகண்டு அங்கிருந்த பணிப் பெண்களை அழைத்து இந்தச் சமாசாரத்தை இளவரசிக்கு தெரிவிக்கச்சொல்லலும் நித்திரை பங்கம்செய்வதற்கு அவள் பயந்து நிற்றலைக்கண்டு இவர்கள் எப்படியாயினும் எழுப்பித்தான் தீரவேண்டும் என்ற வளவில் அவள் சென்று எழுப்பிச் சமாசாரத்தைச் சொன்னபோது அதிக வருத்தமுற்றுப் பள்ளியறையைவிட்டுத் தன்னைப் பார்க்கவந்த குரு, பிரதான மந்திரி இவர்கள் முன்பாகத்தான் கண்ணும் கண்ணீருமாய் வந்து நின்றனள். ஆயினும் மனோதைரியத்தை விடவில்லை. இறந்த அரசன் நல்லபதவியடையும் பொருட்டும் தான் அரசியாவதற்கு வேண்டிய தைரியம் கொடுக்கவும் தன்பொருட்டுக் கடவுளைக் குறித்துத் தியானம் பண்ணும்படி எதிரிலிருந்த குருவை வேண்டித் தானும் சற்று நேரம் கடவுளைக் குறித்துத் தியானஞ் செய்ய ஆரம்பித்தாள். இது முடிந்தவுடன் தன்னுடைய பெரியபிதாவின் மனைவியாகிய அடிலேயிட் அம்மாவுக்கு நேர்ந்த துக்கத்தை ஆற்றும்பொருட்டு உடனே ஒரு கடிதம் வரைந்து, "மகா கனம்பொருந்திய மகாராணியார்" என்னும் மேல்விலாசம் எழுதி அனுப்புதலும் அருகிலிருந்தவர்சள் இனி அவர்கள் ராணியார் அல்லாததனால் மேல்விலாசம் பிழை யென்று சொல்ல, அதற்கு "ஆம், எனக்கும் தெரியும் அவர்கள் சிரழிந்திருப்பதை நானு அவர்களுக்கு முன் ஞாபகம் மூட்டுவது? அப்படி எழுதுவதற்கு என் மனமும் கையும் எழா!" என்று சொல்லிக் கடிதத்தை அனுப்பிவிட்டாள்.

மேமீ 21உ மந்திராலோசனை சபையாரைக் கூட்டுவித்ததும் அவர்கள் விக்டோரியாவைத் தங்களுக்கரசியாக அங்கீகரித்துக்கொண்டார்கள். அந்தச் சந்தர்ப்பத்தில் நடக்கவேண்டிய சடங்குகளும் நிறைவேறின. அவர்களைத் தான் தன் முன்னோர் காத்துவந்தது போலக் காப்பதாகவும், ஆங்கில நாடு அபிவிருத்தியடைவதற்குரிய மார்க்கமெல்லாந் தேடுவதாகவும் அது நிறைவேறும் பொருட்டுப் பார்லிமென்டார் தனக்கு மிக்க உதவி செய்வார்களென்றும் எவற்றிற்கும் மேலாய எல்லாம் வல்ல முழுமுதற் கடவுள் அருள்பற்றி நிறைவேற்ற எண்ணியிருக்கிறதாகவும் சொல்லி முடித்தார்கள்.

---

* Privy Councillors.

சிறு வயதா யிருத்தல்பற்றி இக்காலங்களில் நடக்கவேண்டிய படி நடந்துகொள்வது அருமையென வெண்ணியிருந்தவர்களுடைய எண்ணமெல்லாம் இறும்படி அதிக மேன்மையாக நடந்து கொண்டார்கள். இதைக்கண்ட பலரும் வியக்கவும் அப்போதிருந்த பிரதான மந்திரியாராகிய * மேல்போர்ன் என்பவரும் அதிக ஆனந்தங் கொண்டார். இராஜரீக தந்திரங்களெல்லாம் மிகப்பெருமைவாய்ந்த இவ்வரசிக்கு அவற்றை முதலிற் கற்றுக்கொடுத்தவர் இவர்தாம். 1837ஹூ ஜூன் ௴ 21உ செயின்ட் ஜேம்ஸ் கோட்டை வாயிலிலும், இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, அயர்லாந்து என்னும் நாடுகள் முழுதிலும் விக்டோரியா மகாராணியார் இந்நாடுகளுக்கு அரசியாராக விருப்பாரென முரசமுழங்கின. பிறகு பட்டாபிஷேகமும் அதிக ஆடம்பரத்துடன் நடந்தது.

சிம்மாசனத்திற்குவந்த சில நாளைக்குள், மரணதண்டனை விதிக்கப்பட்ட ஒருபதாதியினுடைய மரணசாதனத்திற்குத் தன்னுடைய கையெழுத்து இடவேண்டிவந்தது. அரசியாருடைய தயாளகுணத்தை என்னென் றெடுத்துரைப்பது! அந்தச் சாதனத்தை வேல்லிங்டன் பிரபு தம்கையிற் கொடுத்ததும் கண்கலங்கி நின்று அவரை நோக்கி "ஐய! இவனுடைய குணத்தைக் குறித்து நல்லது யாதேனும் சொல்வதற் கில்லையோ?" என்றனர்.

பிரபு.—ஒன்று மில்லையே! இவன் மூன்று தடவைகளிற் சேனையைவிட்டு எதிரி சைனியத்திற் போய்ச் சேர்ந்துவிட்டான்.

அரசி.—பிரபுவே, சற்று யோசித்துப்பாருங்கள். ஒருயிரைக் காப்பாற்றுங்கள்.

பிரபு.—மகாகனந் தங்கிய மாதரசி! எனக்குத் தெரிந்த அளவில் அவனுடைய நற்குணம் எனக்குத் தோற்றவில்லை. ஆயினும் சில சாக்ஷிகள் இவனுடைய குணத்தைப்பற்றிப் புகழ்ந்துரைத்தார்கள். ஒருவேளை நல்ல மனிதனாக இருக்கலாம். பதாதிக்குரிய லக்ஷணம் சிறிதேனும் கிடையாது.

அரசியார் "இவ்வளவாயினும் அவன் விஷயத்திற் சிலர் சிபார்சு செய்தார்களென்று சொன்னதற்கு அனேக வந்தனம்" என்று சொல்லி மரண சாதனத்தின்பேரில் "மன்னித்தோம்" என்று

* Lord Melbourne.

எழுதிக் கைந்நடுக்கத்துடன் அதை வெல்லிங்டன் பிரபுவினிடத்தில் தள்ளிவிட்டார்கள்.

அரசி இன்னும் சிலகாலம் சென்றபிறகு தன் பிரதான மந்திரியை அழைத்துத் தன் தகப்பனர் பட்ட கடன் முழுதும் தீர்க்க வேண்டுமென்னும் அவாவிருப்பதாகத் தெரிவித்து அதற்குரிய ஏற்பாடு செய்தனள்.

பிரதான மந்திரியாகிய மேல்போர்ன் துரையவர்கள் இராஜாங்க விஷயத்தில் மாத்திரமேயன்றி மற்ற விஷயங்களிலும் ஆலோசனை சொல்லிக்கொண்டு வந்தார். அரசியாரும் அவரைப் பிதாவைப் போற்பாவித்து அவரிடத்தில் அதிக நம்பிக்கை வைத்து நடத்திக்கொண்டு வந்தார்கள். அவரும் அதற்குத் தகுந்தபடி நடந்து வந்தார். இஃதிப்படியிருந்தபோதிலும் இராஜரீகத்தை நடத்துவதில் தன் பார்வைக்கு வரும் ஒவ்வொரு விஷயத்திற்கும் காரணங் காணது மேற்காரியம் நடத்துவதேயில்லை. ஒருகால் மெல்போர்ன் துரையை அரசியாரின் திறமையைக் குறித்து அவர் தம் சிநேகிதரொருவர் கேட்டபோது, அவர், "பத்து அரசர்களிடத்திலிருந்து நிர்வகித்தல்சுலபம்; இவ்வரசியாருடைய ஆக்ஷேபங்களுக்கெல்லாம் பதிற் சொல்லி மிகுந்து வருவது மிகவும் அசாத்தியம்" என்று சொல்லியிருக்கிறர். மேலும் ஒரு சமயத்தில் இராஜாங்க விஷயமான ஒரு பத்திரத்தைக் கையெழுத்துப் பெறும்பொருட்டு அரசியாரிடத்திற் கொடுக்க அவர்கள் அதை வாங்கி வைத்துக்கொண்டு தன் மனசாக்ஷி திருப்தியடையும்பொருட்டு அதைக்குறித்து அனேக கேள்விகள் கேட்டார்கள். சிலவற்றிற்குத் தகுந்த சமாதானம் சொன்னர். சிலவற்றிற்குச் சரியான சமாதானம் சொல்ல அவகாசமில்லை. எல்லா ஆக்ஷேபங்களுக்கும் சரியான சமாதானம் தான் பெற்றபிறகுதான் அவர் தம்முடைய கையெழுத்தைப் பெறலாமென்று அரசியார் சொன்னதும், மந்திரியார் 'அப்பத்திரத்திற்கு அன்றுகையெழுத்துச் செய்யாவிட்டால் அநேகமுக்கியமான காரியங்களுக்கு இடையூறுநேரிடும், ஆகையாற்கையெழுத்துச்செய்துதான்திரவேண்டும்' என்றனர். அதற்கரசியார்சற்றுக் கோபச்சின்னத்துடன் முறுவல்செய்து, " பிரதிமையென்று என்னை நினைத்துவிடலாகுமோ! பிரபுவே! நல்ல தின்னதென்றும் நல்ல தல்லது

இன்னதென்றும் தெரிந்து நீதி நடத்தும்படி கற்பிக்கப்பட்டேனே யன்றி, தாங்கள் இப்போது சொல்கிற வண்ணம் நடக்க வேண்டுமென்று எனக்குயாரும் சொல்லிக்கொடுக்க வில்லை. மேலும் அவசர நிமித்தம் கையெழுத்துச் செய்தல் வேண்டும் என்கிறீர்கள். மனசாக்ஷிக்கு விரோதமாக எவ்வளவு அவசரமான காரியமாயிருந்தபோதிலும் காரியத்தைத் தேற விசாரியாது கையெழுத்துச் செய்யமாட்டேன்'' என்றனள். மந்திரியாரும் தன் சொல் அங்கீகரிக்கப்படாததுபற்றித் தலை குனிந்து அன்றைக்கு அரசியாரிடம் செலவு பெற்றுக்கொண்டு திரும்பிவிட்டனர். இதைப்போன்று அநேகந்தடவைகளில் நடந்தது. கைக்நாட்டுப்பேர்வழியல்லள் என்பதைத் தெரிந்து மற்ற மந்திரிகளும் மற்றுமுள்ள உத்தியோகஸ்தர்களும் தங்கள் தங்கள் வேலையை அதிகக் கவனத்துடன் பார்க்க ஆரம்பித்தார்கள். இஃதிப்படி யிருப்பினும் மந்திரியாரிடத்தில் தான்வைத்த விசுவாசத்திற் கோரளவில்லை. அவரை விட்டு ஒரு வேளையாயினும் தனியே போஜனம் செய்வதற்கு விரும்பாள்.

அநேக தேசத்து இராஜாக்கள் சக்கிரவர்த்திகள் குடிப்பிரதிநிதிகள் பட்டாபிஷேக மகோற்சவத்தைக் கண்கொண்டு பார்த்து ஆனந்த மடையும் பொருட்டு இலண்டன் பட்டணத்திற்கு வந்து சேர்ந்தார்கள். 1838ஹு ஜூன்மீ 14உ பட்டாபிஷேகத்திற்கு முகூர்த்தம் வைக்கப்பட்டிருந்தது. அன்றைத்தினம் அலங்காரம் பண்ணப்பட்டு ஊர்உலா வந்து வேஸ்மினிஸ்டர் என்னு மிடத்தில் ஆக்கப்பட்டிருந்த நவரத்தின கசிதமான மண்டபஞ்சேர்ந்து இராஜாஜாக்கள் முன்பும் மற்றையவர்கள் முன்பும் பட்டாபிஷேகச்சடங்கு நிறைவேறியது. அரசியார் அதிக *உயரமாயில்லாத போதிலும் மிக்க கம்பீரத்துடன் வீற்றிருந்தார்கள். அவர்களுக்குச் சூட்டின முடியிற் பதித்திருந்த † நவரத்தினங்களும் கோடி சூரியப் பிரகாசந்தந்தன. அநேக அரசர்களும் பிரபுக்களும் வந்து நமஸ்காரம் செய்து போயினர். ‡

---

* 5 அடி 2 அங்குலம். † அதன் மதிப்பு 1,12,760 பவுன் அல்லது சுமார் 17 லக்ஷம் ரூபாய் பெறும்படியானது.

‡ அரசியார்க்கு வருஷாந்தரச் செலவிற்கு 3, 86, 000, பவுன் அல்லது சுமார் 58-லக்ஷம் (57, 90, 000) ரூபாய் பார்லிமெண்டார் கொடுத்துவந்தார்கள்.

1819ஆ ஆகஸ்ட்டுமீ 26உ ஜெர்மனி தேசத்துக் * கோபர்க் என்னும் சிற்றரசர்க்கு ஒரு குழந்தை பிறந்தது. அதற்குத்தக்க பருவத்தில் நாமகரணமுதலிய சடங்குகள் நிறைவேற்றப்பட்டது. இக்குழந்தைக்கு † ஆல்பேர்ட் என்னும் பெயர் வைத்தார்கள். இக்குழந்தையும் புத்திகூர்மையுடையதா யிருந்ததனாற் சிறுவயதிலேயே கல்வியில் அதிகவிருத்தி அடைந்துவிட்டது. விக்டோரியா மகாராணியார்க்கு அம்மான் பிள்ளை இக்குழந்தை. 1836ஆ தன்னுடைய அத்தையையும் அத்தை பெண்ணையும் பார்க்கும் பொருட்டு இலண்டன் பட்டணத்திற்குப் போய்வந்ததாக மேலே கூறப்பட்டிருக்கிறது. அப்போதுதான் முதற்றரம் விக்டோரியா இப்பிள்ளையைப் பார்த்து அவர்தம் தமையனுடன் போயிருந்தும், வயதிலும் மூன்றுமாதம் சிறியவராயிருந்த போதிலும் இவருடன் சில நாள் பழகியபிறகு இவருடைய அபூர்வகுணங்களைக்கண்டு மகிழ்ந்து இவரையே தனக்கு நாயகனாக்கிக்கொள்ள எண்ணங்கொண்டாள். ஆயினும் அப்போது அவ்வெண்ணத்தை வெளிப்படுத்தவில்லை. தன்னுடைய பட்டாபிஷேகமானதும் அதைக்குறித்து வியந்து ஆல்பெர்ட் எழுதிய கடிதத்தைப் பார்த்துக் களிகூர்ந்திருந்தாள். பிறகு ஆல்பெர்ட்டும் அவர்தம் தமையனும் லண்டன் பட்டணத்திற்கு விக்டோரியாவைப் பார்க்கும்பொருட்டுப் போயிருந்தார்கள். அப்போது, தானே ஆல்பேர்ட்டை வரவழைத்துத்தன்னுடைய நாணத்தைச்சற்றுவிலக்கிவைத்துத் தன்னுடைய வெண்ணத்தை ஒருவிதமாய் வெளிப்படுத்த அதன் குறிப்பறிந்து அவரும் சம்மதித்தார். இரண்டொருநாள் சென்றதும் பார்லிமென்டாரை வரவழைத்துத் தன்னெண்ணத்தை அவர்கட்குத் தெரிவித்து அவர்களுடைய சம்மதமும் பெற்றாள். விவாகமகோற்சவத்திற்குரிய ஏற்பாடுகளெல்லாம் செவ்வனே நடந்தன. 1840ஆ பிப்ரவரிமீ 10உ அதற்குரிய நாளாக ஏற்படுத்தப்பட்டிருந்தது. அந்தச் சுபதினத்தில் விவாகமகோற்சவம் பட்டாபிஷேக மகோற்சவத்தினும் அதிக ஆடம்பரத்துடன் நடந்தது. அன்றுமுதல் மன்னனும் மனைவியும் உடலிரண்டேனும் உயிரொன்றேயாயினர்.

---

* Duke of Saxe-Coburg-Saalfeld.

† Prince Albert.

அரசியார்க்கு வந்த ஆபத்துக்களோ அநேகம். பல முறைகளில் உயிர்க்குச்சேதம் நேரும்போ லிருந்தது. கடவுளுடைய கிருபையால் எல்லாம் ஆதவன் முன்னர் அறுகம்புற் றங்கிய பனிபோலாயின.

ஆல்பர்ட் பிரபு அரசியார்க்கு அதிக உதவியாம்பொருட்டு ஆங்கிலபாஷையும் அதிலுள்ள சரித்திரங்களும் நாடோறும்இடைவிடாது கற்றறிந்தார். சுகதுக்கத்துக்குரிய ஒருவர் தம்முடன் எப்போதும் இருந்து தமக்கு ஆலோசனை சொல்லிவந்தது மகாராணியார்க்குப் பேருதவியாயிருந்தது.

1840ஆம் நவம்பர்மீ 21உ ஒரு பெண்குழந்தை பிறந்தது. இதற்கு விக்டோரியா அடிலேயிட் என்னும் பெயரிடப்பட்டது. இம்முதற் பெண் 1858ஆம் ஜனவரிமீ 25உ ஜெர்மனி தேசத்து சக்ரவர்த்திக்கு விவாகம் செய்து கொடுக்கப்பட்டது. இந்த அம்மாவுடைய புத்திரர்தாம் தற்காலத்தில் ஜெர்மன் சக்ரவர்த்தியாயிருக்கிறார்.

1841ஆம் நவம்பர்மீ 9உ மகாராணியார்க்கு முதற்பிள்ளை பிறந்தது. அதற்கு ஆல்பர்ட் எட்வர்ட் என்னும் பெயரிடப்பட்டது. இதுதான் பட்டத்திற் குரியபிள்ளை; இது பிறந்தவுடன் நாடெங்கும் விழாக்கொண்டாடப்பட்டது. ஆனந்தத்திற் கறிகுறியாகச் செய்த பலவற்றுள்ளும் கடுந்தண்டனை விதிக்கப்பட்டுச் சிறைச்சாலையிலிருந்தவர்களெல்லாம் விட்டுவிடப்பட்ட தொன்று. மகாராணியார் தம்மைத்தம் தாயார் கல்வியிலும் மற்ற விஷயத்திலும் கவனம் வைத்து விருத்திசெய்தது போலவே தாமும் தம் கணவரும் இக்குழந்தைக்குக் பல கலைகளும் போதிப்பித்து வந்தார்கள். 1863ஆம் மார்ச்சுமீ 10உ டேன்மார்க் அரசன் புத்திரியாய அலெக்ஸாந்திராவை இவர்க்கு மணவினை முடிப்பித்தார்கள். இவர்க்கு ஆண்மக்கள் இருவர் பிறந்தனர். இவர்களிற் சென்னை முதலிய இடங்களுக்கு 1890ஆம் வந்த முதற்பிள்ளையாகிய பிரின்ஸ் ஆல்பேர்ட் விக்டர் என்பவர் 1892ஆம் சுரத்தினால் உயிர் துறந்தார். இவர் தகப்பனாரும் 1876ஆம் இந்தியாவிற்குவந்து பலவிடங்களைப் பார்த்துவிட்டுப் போனார். காலஞ்சென்ற நமது மகாகனம் பொருந்திய மகாராணியார்க்குப் பிறகு இவர் சென்றமீ 23உ யன்றே

இராஜாவாகவும் இந்திய சக்ரவர்த்தியாகவும் தங்கள் குடிகளால் அங்கிகரிக்கப்பட்டனர். இவர்க்குப் பின் பட்டத்திற்கு வருவதற்கு * ட்யூக் ஆவ் யார்க் என்ற ஒரு பிள்ளை இருக்கிறது.

மகாராணியார்க்குப் பிறந்த மூன்றாவது குழந்தையின் பெயர் பிரின்ஸேஸ் ஆலிஸ் என்பது. நாலாவது குழந்தைக்கு † ஆல்பிரட் என்று பெயர். இவர் 1870ஹு இந்தியாவிற்கு வந்து சில விடங்களைப் பார்த்துச் சென்றார். 1874ஹு ருஷியா சக்ரவாத்தியின் புத்திரியை விவாகம் செய்துகொண்டார். இவர் மனைவி இப்போதிருக்கும் ருஷிய சக்ரவர்த்திக்குச் சகோதரியார். இவர்க்கொரு பிள்ளையும் நான்கு பெண்களும் உள. இவர் சென்றவருஷம் காலஞ் சென்றுவிட்டார்.

ஐந்தாவது குழந்தையும் ஆறாவது குழந்தையும் பெண்கள். மேரி லூயிஸ் என்னும் ஆறாவது குழந்தையை மகாராணியார் தம் குடிகளில் ஒருவராய ஆர்கயில் (Duke Argyle) பிரபுவின் புத்திரர்க்கு விவாகஞ்செய்து கொடுத்தார். தமக்குக் குடிகளிடத்திருந்த விசுவாசமும் குடிகளுக்கு அரசியாரிடத்திருந்த அன்பும் பக்தியும் முன்னிலும் இவ்விவாகத்தினால் அதிகரித்தது. அரசியாருடைய மருகர் இப்போது கனடா நாட்டுக் கவர்னர் ஜெனரலாயிருக்கிறார்.

ஏழாவது குழந்தையும் எட்டாவது குழந்தையும் பிள்ளைகள்; ஒன்பதாவது பிறந்தது பெண். அரசியார்க்கு இக்குழந்தையிடத்து அதிக விசுவாசமிருந்ததனால் விவாகமானதும் மகளை விட்டுப் பிரிய மனமில்லாததனால் மருகனையும் தங்நாட்டிற்கு வரவழைத்து வைத்துக்கொண்டனள். இவர் ஆப்பிரிக்கா யுத்தத்தில் 1897ஹு மாண்டுபோயினர். அரசியார் பெற்றெடுத்த ஒன்பது குழந்தைகளில் ஆண்பால் நால்வர் பெண்பாலைவர். தற்காலமிருப்பவர்கள் இரண்டு பிள்ளைகளும் நான்கு பெண்களும். மேற் கூறியபடி இவர்கள் ஐரோப்பா கண்டத்து அரசர்களுக்கு மருகராயும் மருகியராயும் மைத்துனராயு மிருக்கின்றனர்.

இவர்கள் தந்தையாராகிய மகாகனம் பொருந்திய பிரின்ஸ் ஆல்பேர்ட் என்பவர் ஆங்கிலநாட்டின் நன்மையும் அதைச்சார்ந்திரு

* Duke of York. † Duke of Edinburgh.

க்கும் மற்றநாடுகளின் அபிவிருத்தியையும் அதிகமாய் விரும்பிச் செய்யக்கூடியனவற்றைத் தாம் செய்தும் அரசியாரைக் கொண்டு செய்வித்தும் வந்தார். பற்பல நாட்டினெடுஞ் சம்பந்தங்கள் பெருகும்பொருட்டு 1851ஷு ஒரு பெரியபொருட்காட்சி * ச்சாலை ஏற்பாடு செய்தனர். இஃது அநேக அபிவிருத்திக்குக் காரணமா யிருந்தது. நாளுக்குநாள் ஆங்கிலநாட்டுக் குடிகள் இவரிடத்து அதிக அன்புவைக்கத் தலைப்பட்டார்கள். 1861ஷு அவர் இறந்து போனபோது ஆங்கிலநாடு முழுதும் துக்கசாகரத்தில் மூழ்கியது. மகாராணியார் தம் நாயகனிடம் வைத்திருந்த அன்பும் பக்தியும் உலகத்தில் வேறொரு பத்தினிக்குத் தன்னாயகனிடத்தில் அவ்வளவு இருந்தனவென்று சொல்வது அருமையாகும்.

1858ஷுவரை கம்பெனியார் ஆண்டுவந்த இந்தியாவை அவ் அவ்வருஷ முதல்தான் நேரில் ஆள்வதாய்த் தெரிவித்து இந்தியாவைக் குறித்த விஷயங்களையெல்லாம் தாம் அதிகமாய்க் கவனித்து வருவதானார்கள். 1877ஷு ஜனவரிமீ முதல்தேதிஇந்திய தேசத்திலுள்ள அரசர்களையும் மற்றும் பிரபலமானவர்களையும் டேல்லி பட்டணத்திற்கு வருவித்து இந்திய சக்ரவர்த்தினியா ரென்னும் பட்டமும் வகித்தனர். இவர்கள் இராஜ்ஜியபாரம் செய்துவந்த சென்ற 63 † வருஷங்களிலும் அதிக பெரிய யுத்தங்களும் பெருங் கலகங்களு மில்லாதிருந்ததனால் இவர்கள் ஆளுகைக்குட்பட்டிருந்த பற்பல நாடுகளும் மற்ற நாடுகளைக் காட்டினும் பல்வளங்களிலும் செழித்தோங்கின.

இம்மகாராணியாருடைய ஆளுகையில் இந்தியாவில் தபால் ஆபீசு, இருப்புப்பாதை, தந்தி, கல்வி, விவசாயத்திற்குரிய பெருங் கால்வாய்கள், குடிகளுக்கு இன்னும் எண்ணில்லாத பல நன்மை பயக்கத்தக்கன உண்டுபண்ணப்பட்டு நாடோறும் அபிவிருத்தி அடைந்துவருகிறது. இவைகளின் பயனைப் பலரும் அநுபவித்திருக்கிறார்களாகையால் அவைகளை இங்கு விரித்துக் கூறாது விடுகின்றோம். இத்தகைய மகாராணியாரவர்கள் சென்ற ஜனவரி

---

* The International Exhibition of 1851.

† ஆப்பிரிகா யுத்தமாத்திரம் பெரிய யுத்தமென்றே சொல்லல் வேண்டும். ஒரு விஷயத்தில் இதற்கும் பெரியது வேறொன்றிருந்ததைக் காணோம். ஆரம்பித்து ஒருவருஷம் நான்குமாதம் ஆயின; இன்னும் முடிந்தபாடில்லை.

மாசம் 22-ஆந்தேதி மாலை * $6\frac{1}{2}$-மணிக்குத் தேகவியோகமாயினர் என்பது கேட்டு உலகமனைத்துந் துக்கசாகரத்தில் மூழ்கி வருந்துகின்றது. இனியென்செய்வது!

நமது மகாகனம் பொருந்திய மகாராணியா ரவர்களுடைய நற்குணமும் நற்செய்கையும் எவரும் அறிந்து ஆனந்தங்கொள்ளக் கூடிய விஷயம். இந்தியாவிலுள்ள பெண்பாலாரும் தங்கள் புருஷர்களிடத்தும் சுற்றத்தாரிடத்தும் பெற்றோர்களிடத்தும் நடந்து கொள்ளுவதற்கு நம் மகாராணியார் தாம் நடந்து காட்டிய வழியைப்பின்பற்றி நடப்பார்களெனவும் புருஷர்களும் தாங்கள் நடப்பதற்கு உதவியானவற்றைக் கைக்கொண்டு நடப்பார்களெனவும் நம்புகின்றோம். இவரைப்போன்ற அரசியாரும், தாயாரும், பத்தினியும், பெறுவது அருமையாகும். இப்போதுஇந்திய சக்ரவர்த்தியாயிருக்கும் இவரது புத்திரரும் தம் தாயைப்போன்றே தம் குடிகளை ஆதரித்து வரும்படி தைரியமும் மனவூக்கமும் இவர்க்குத் தந்தருள எல்லாம் வல்ல முழுமுதற்கடவுளைப் பிரார்த்திக்கின்றனம்.

கல்துளம்-குப்புசாமி முதலியார்.

[இதை யடுத்துப் பதிப்பிக்கப்படும் விளம்பரம் நமது துரைத்தனத்தாரவர்களால் அச்சிடப்பட்டு வெளிப்படும் கெஜட்டிலுள்ளவாறே பெயர்த்து அச்சிடப்பட்டிருக்கின்றது. ஆங்கிலத்துள்ள அதனை யாமே நேரில் மொழிபெயர்த்து அச்சிடக்கருதினோமெனினும் அவகாசக் குறைவால் இவ்வாறு செய்யும்படி நேரிட்டது. ஆகவே அந்த விளம்பரத்தில் எவையேனும் மொழி பெயர்ப்பு வகையானும் பிறவகையானும் குறைவுக ளிருக்குமாயின் அவற்றிற்கு யாம் உத்தரவாதியரல்லேமென்பதுணர்க.

பத்திராதிபர்.]

---

* Madras Time - 11-50 P. M.

# விளம்பரம்.

போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ், 1901-ம்ஷு பிப்ரவரிமீ 11உ.

நெ 115.—கீழேவரும் இந்தியா கவர்ன்மென்டாருடைய கெஜெட் எக்ஸ்ட்ரார்டினெரி பிரசித்தம் செய்யப்பட்டிருக்கிறது:—

## ஹோம் இலாக்கா.

## பப்ளிக்.

கல்கத்தா, 1901-ம்ஷு பிப்ரவரிமீ 5உ

நெ. 510.—மாட்சிமைதங்கிய மன்னராகிய இந்துதேசத்துச் சக்கிரவர்த்தியானவர் இந்து தேசத்து ஸமஸ்தான அதிபதிகளுக்கும் பிரஜைகளுக்கும் அடியிற்கண்ட நிருபத்தைக் களிகூர்ந்து அனுப்பியிருக்கின்றனர்.—

" இந்து தேசத்து ஸமஸ்தான அதிபதிகளுக்கும் பிரஜைகளுக்கும் தெரிவிப்பது யாதெனில்,—என் அன்புக்கும் பெருந் துக்கத்துக்கும் இடமாகிய என் தாயார் (யாவரும்) துயரடையும்படி தேக வியோகமான காரணத்தினால், மிகப்புராதனமான வம்சபரம்பரை வழியாக எனக்குக் கிடைத்த ஸிம்ஹாஸனத்தை யான் உரிமை வாயிலாகப்பெற்றேன். என் இந்திய ராஜ்ஜியங்களிலுள்ள சுதேச ஸமஸ்தானங்களை ஆண்டுவரும் அதிபதிகளுக்கும் குடிஜனங்களுங்கும் என் வாழ்த்துரை அனுப்பவும், அவர்களுடைய க்ஷேமத்தில் எனக்கு மனப்பூர்த்தியாயுள்ள சிரத்தையை அவர்களுக்கு வற்புறுத்தித் தெரிவிக்கவும் இப்போது விரும்புகிறேன். எனக்குமுன் மிகவும் பிரசித்தி பெற்றவரும், என் துயரத்துக்குக் காரணமாய் மரித்தவருமான மஹாராணியாரே - இந்து தேசத்து விவகாரங்களைப் பரிபாலிப்பதென்னும் பொறுப்பைத் தாமே நேரில் வகித்தவரும், அந்த அகண்ட தேசத்தின் துரைத்தன விஷயத்தில் முன்னிருந்ததைவிட அதிக சம்பந்தத்தைப் பெற்றிருந்ததற்கு அறிகுறியாகச் சக்கிரவர்த்தினி என்னும் பட்டத்தை வகித்தவருமாகிய இத்தேசத்துமுதல் வேந்து.

" இந்தியாவைச் சேர்ந்த சகல விஷயங்களிலும் மஹாராணியாராகிய சக்கிரவர்த்தினியார் நேரில் இடைவிடாத ஆழ்ந்த சிரத்தை காட்டி வந்தார்கள்; அத்தேசத்துக் கோடானுகோடி பிரஜைகள் அச்சக்கிரவர்த்தினியார் விஷயத்திலும் அவர்களது ஸிம்ஹாஸனாதிபத்தியத்திலும் தெரிவித்த ராஜவிசுவாசமும் அன்பும் எனக்கு நன்றாய்த் தெரிந்திருக்கின்றன.

" சக்கிரவர்த்தினியாருடைய மேன்மைதங்கிய நீடித்த ஆளுகையின் கடைசி வருஷத்திலே தென் ஆபிரிகாவில் நடந்த யுத்தத்தில் சுதேச ஸமஸ்தான அதிபதிகள் தேசாபிமானத்தினாற் செய்த பெருந் தன்மையான உதவியினாலும், சுதேச ராணுவத்தார் தங்களுடைய ஜன்ம தேசத்தின் எல்லைகளுக்கப்பாற் செய்த பராக்கிரமமான சேவகத்தினாலும் மேற்படி ராஜ விசுவாசமும் அன்பும் பிரசித்தமாய் விளங்கின.

" அந்தச் சக்கிரவர்த்தினியாருடைய விருப்பத்தினாலும் அனுமதியினாலுமே யான் இந்தியாவுக்கு வந்து, பிரசித்திபெற்ற புராதனமான ராஜ்ஜியத்தைச் சேர்ந்த ஸமஸ்தான அதிபதிகளையும் பிரஜைகளையும் பட்டணங்களையும் நேரிற்கண்டு தெரிந்துகொண்டேன்.

" அப்போது என்மனதில் ஆழ்ந்து பதிந்த விஷயங்களையான் ஒருபோதும் மறவேன்; முதல் மஹாராணியாராகிய சக்கிரவர்த்தினியாரைப் போலவே யானும் சகல வகுப்புகளைச்சேர்ந்த என் இந்திய குடிஜனங்களின் அசேஷ க்ஷேமத்திற்காகப் பாடுபடவும் அந்த ஜனங்களுடைய இடைவிடாத ராஜவிசுவாசத்திற்கும் அன்பிற்கும் அச்சக்கிரவர்த்தினியாரைப் போலவே பாத்திரனாகவும் முயல்வேன்.

(ஒப்பம்) எட்வர்ட், மன்னரும் சக்கிரவர்த்தியும்."

விண்ட்ஸர் காஸில்;

1901-ம் ஆு பிப்ரவரிமீ 4உ.

---

# அரசிபிரிவாற்ருமை.

## கலிவிருத்தம்.

1. ஈங்குற மிந்தியர்க் கியைந்த வாறெலாம்
பாங்குற நலம்பல பரிந்து செய்தவ
ளாங்கில நாட்டினல் லரசி யாகிய
வோங்கொளி விசயைத னுயிர்து றப்பதோ ?

2. நின்மலக் குணத்தின ணேய மிக்கவ
ணன்மையே விரதமா நயந்து நின்றவள்
புன்மையை நாடொறும் போக்கி யாண்டவள்
பன்மகார் துதிசெயப் பாரி னீங்கினுள்.

3. ஐயகோ வினியந மரசி போயினுள்
செய்யகோல் செலுத்திய செல்வி போயினுள்
வையகங் காத்தருண் மாது போயினு
டுய்யவாழ் வுடையபைந் தோகை போயினுள் !

## அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

4. பொங்குபுகழ் விசயையெனுங் கோமாட்டி விண்ணுலகம் புக்க போழ்து
தங்குமொளிப் பரிதிசென்று தண்கடலில் வீழ்ந்திட்டான் றணந்த பாரின்
மங்கையுள நைந்திருளின் படாம்போர்த்து வருந்திணுண் மயங்கிப் பின்ன
ரெங்குமுள வெவ்வுயிரு மரசிபிரி வாற்ருமை லிரங்கிற் றம்மா !

5. செம்மைநெறி திறம்பாது பல்லாண்டு தன்றலைவற் சேர்ந்து வாழ்வா
டம்மையகஞ் சென்றவழித் தாயிறந்து போனதொரு தகைமை மானப்
பொம்மலிளம் புவிம்களு நீயிறப்பக் கண்டுமனம் புழுங்கு கின்ருள்
விம்முயிர்த்துத் தொழுகின்ரு ளெழுகின்ரு ளழுகின்ருள் விழுகின் ருளே.

6. இவ்வுலகின் மகளிரது மேன்மையினை யிபையவினி தெடுத்து நாட்டிச்
செவ்விபெற வரசாண்ட விசயையெனுஞ் சீமாட்டி தேவர் வாழு
மவ்வுலகின் கணுமன்ஞர் மேதகவை யன்பினெடுத் தறையு மாறு
நவ்விவிழி மாதரசி விண்ணுலகிற் கெழுந்தருளி நடந்தாய் போலும்.

7. பெண்ணெதற்கு முரியளல டன்வயமு முடையளலள் பேதை யாவ
ணண்ணியதன் றலைவனுக்குக் குற்றேவ லாட்டியென நாளுந் தம்மு [றும்
ளெண்ணமிட்டுப் புன்மொழிகள் பலபிதற்றித் திரிதருஞ்சில் லெனியர்கே
வண்ணமந்தப் போலிவசை மொழிபொய்ப்ப நீயாண்ட மகிமையென்னே!

ஷ வேறு.

8. அரசற் குரிய மனையாட்டி யரசி யாவண் மற்றொளிரு
மரசிக் குரிய தலைமகனே வரச னல்லன் மெய்யிதெனப்
பரசு நினது நாட்டுவிதி பகரா நின்ற பரிசதனுன்
விரைசேர் குழலி னார்பெருமை மிகுதி யென்றல் போதருமால்.

தரவுகோச்சகக் கலிப்பா.

9. தண்டாச் சிறப்புடைய தையானின் னாளுகையிற்
கண்டாய் புதுமையெலாங் காரிகைமார் தந்தலையிற்
கொண்டாடு மாதே குவலயத்திற் பன்னலமு
முண்டாகும் வண்ண முவந்தருளி யாண்டனையே.

10. பூண்டநின்கோ ணல்லசெயல் பொல்லார்க்கு மாதவினுன்
வேண்டியவெச் செல்வமுநீ வேட்டபடி பெற்றனைமுன்
னாண்ட வரசரினு மம்மே நினக்குமிக
நீண்டபெரு வாழ்வினைநின் னேர்மையன்றோ நல்கியதால்.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

11. நயமுறு மன்னே நின்னை நாடெனு முடம்பி னுற்ற
வுயிரென மொழிகோ வன்றி யொளியுடை விழியே யென்கோ
செயிரிலா வறிவே யென்கோ செவ்விய மனனே யென்கோ
வயமுருக் கொண்ட தன்ன வான்படைச் செல்வ மாதே.

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரி.

---

## சிலப்பதிகார வாராய்ச்சி.

---

இனி நாடு காண் காதை. இப்பொழுதுதான் இந்நூலின் ரஸபாகத்திற்கு வந்துளோம். இதுவரை, நாமாங்காங்குக் கூறியபடி கவித்திறனும், நயமுமில்லாமற் கல்வித்திறமையே நிறைந்துள்ள பாகங்கள். ஆயினும் ஆசிரியரின் இனிய நடையாலவையனைத்து முற்சாகத்தை விளைவித்து வந்தன. இனித்தொடங்கும் பாகமே இளங்கோவினுடைய உண்மைத்திறனைக் காட்டுகின்றது. இனிக்கூறும் காதைகள் கதையின் தொடர்ச்சிக்கு அனுவசிய மானவைகள். மதுரையை விட்டுப்புறப்பட்டால், பதிகத்திற் கூறிய கதையின்படி, அடுத்தாற்போல மதுரைக் கடைத்தெருவிற் சிலம்பை விலைகூறவேண்டியதுதான். இதற்கிடையி லிருக்கும் காதைகள் ஆசிரியராக வருவித்துக் கொண்டவைகள். அவைகளை வருவித்துக்கொண்ட காரணம், இவர்களது பரிதவிக்கத்தக்க துன்பத்தை யெவ்வளவு தாமதமாய்க் கூற

லாமோ அவ்வளவு தாமதப்படுத்த வேண்டி வருவித்துக்கொண்டதாக வேற்படுகிறது. அப்படி வருவித்துக்கொண்ட காதைகளாயினும், கதையோடு பொருத்த மற்றிருப்பனவாகக் காணவில்லை. ஏதோ அவைகளிருக்க வேண்டிய தவசியம் போலவே தோன்றுகின்றன. படிக்கும் பொழுதே நாமும், கோவலன், கண்ணகியுடன் மதுரைக்குச் செல்வது போலவே யிருக்கின்றது.

நாடுகாண் காதையிற்றானவர்கள் புகாரை விட்டு மதுரைக்குப் புறப்படுகிறார்கள். புறப்படும் பொழுது தம்மூரை விட்டுத் தாமறிபாவூருக்குப் புறப்படுவதனாற் றமது நாமதேவதைகளை வலம்வந்து வணங்கிச் செல்கிறார்கள். இது போலவே, இராமாயணத்திற் சீதை வனம்போகையில், கங்கை யமுனைகளைத் துதிக்கிறார்கள். இவ்விதங்கோட்டங்களை வலம் வந்து புறப்பட்டது முதற் கவுந்தியின் றொகுப்பு வரும்வரை யொருவரோடொருவர் பேசவே யில்லாது மவுனஞ்சாதித்துச் சென்றார்கள். அவர்களை அப்பொழுது மௌனமாய் வைத்தது ஆசிரியரின் இயற்கையறிவைக் காட்டுகின்றது. இம்மவுனத்திற் கிரண்டு முகாந்திரங்களுள. ஒன்று இவர்கள் ஒருவர்க்குந்தெரியாது ஊரை விட்டோடுவதனாற் பேசினாலாரேனுங்கண்டு கொள்ளலாம். இரண்டாவது, கோவலன் மனது தன்னுடைய பழைய புத்தியீனத்திலும், புதிய வியாபாரத்தின் லாப நட்டத்திலும், தாங்கடக்க வேண்டிய வனவிலங்குகள் நிறைந்த நெடுவழியிலும் மனதைச்செலுத்தி யிருப்பதியல்பு; கண்ணகியும் தனது கனவையும், அக்கனவுப்படி தாங்கள் மதுரைக்குப் புறப்பட்டுவிட்டதனாலினியுங் கனவு பலித்து விடுமோ வென்னுஞ் சவலையுடனிருந்திருக்கலாம்.

இனி யிவர்கள் கவுந்தி யென்னும் ஒரு ஜைனச் சன்னியாசினியைக்கண்டு அவளுடன் மதுரைக்குச் செல்கிறார்கள். இந்த விடத்திலிவளைக் கொண்டு வந்தது மிக வவசியமே. ஏனெனில், கோவலனுங் கண்ணகியுமோ சிறுவர்கள். உலகவனுபவ மற்றவர்கள். வழி தெரியாதவர்கள். மிகக்கவலையோடு கூடிய சித்தமுள்ளவர்கள். துன்பப்பட்டவர்கள். இத்தகையினர் காட்டின் வழி ஒரு - 30 - காவதங் கடக்கவேண்டும். ஆதலின், இத்தருணத்திற்குக் கவுந்திபோன்ற உலக வனுபவமுள்ளவளும், அவர்களிடத்து அனுதாபங்காட்டக்கூடியவளும், புத்திபுகட்டக் கூடியவளுமான ஒரு முதறிவாட்டிவேண்டியதின்றியமையாததே! கவுந்தியும் அப்படி அவர்களை மிகக் கருத்தோடு காத்து அவர்களுக்கு மதுரை செல்லும் வழியையும், வழியிலுள்ள நாட்டுவளப்பத்தையுங் காட்டிச்கொண்டு சென்றாள். இவ்விடத்தில், நமது நூலாசிரியர் நாட்டின் வளப்பத்தையும், கழனிகள், அவற்றில்வேலைசெய்யும் மள்ளர்கள், அவர்க ளநுட்டிக்குஞ் சிலவழக்குக்கள் முதலியவற்றையும் செவ்வனே வருணிக்கிறார். கவுந்தியின் புத்திபுகட்டும்

வாக்கியங்களும், சம்பாஷணைகளும் அவர்களை யுற்சாகப்படுத்திக் கொண்டு வந்தன. இவ்விதம், நன்னெறி யுபதேசிப்பதிலும், ஊர் முதலியவற்றை வர்ணிப்பதிலும், பக்திமார்க்கத்தையநுட்டிப்பதிலும், சினங்காட்டலிலும், கவுந்தியை விசுவாமித்திரரோ டொப்பிடலாம். இவர்கள் போகும் பொழுது ஒரு சோலையிற் சாரணர்களைக் கண்டதாகவும், கவுந்தி அவர்களைவழி பட்டதாகவுங் கூறப்பட்டுளது.

இனி நாம் வம்பப் பரத்தையர் சாபகட்டத்திற்கு வருகிறோம். இவ் வம்பப் பரத்தையர்களைக் கவுந்தி சபித்தது அநீத மென்றே நாம் நினைக்கிறோம். அவர்கள் செய்த குற்றமென்னை? யௌவனத்தோடும் வனப்போடுங் கூடிய புருஷன்பெண்சாதிகளைப் பார்த்த வம்பப்பரத்தையர் அவர் யாவரென்று கேட்க வெண்ணங்கொண்டு கவுந்தியடிகளை நோக்கி யதி வினயத்துடனும், மரியாதையுடனும்,

“நோற்றுணல் யாக்கை நொசிதவத் தீருடை
ஞற்றுவழிப் பட்டோ ராரென”, வினவக் கவுந்தியடிகள்,
“என், மக்கள் காணீர் மானிட யாக்கையர்
பக்க நீங்குமின் பரிபுலம் பின” ரென,

இப்பொய்யுரை போன்றுள மொழிகேட்டவர்,

“உடன்வயிற் றோர்க ளொருங்குடன் வாழ்க்கை
கடவது முண்டோ கற்றறிந் தீர்?”

என்றனர். உடனே கவுந்தி அவர்களை முதுநரி யாகெனச் சபித்தாள். இஃதென்ன குற்றம்? அவர்கள் யாரெனக் கேட்கக் கூடாதா? தெரிந்து கொள்ளும் விருப்பமொவ்வொருவருக்கு மியல்பன்றே? அதற்குக் கவுந்தி சொன்ன மொழி பொய்யாகத்தோன்றியது அவர்களுக்கு. ஒரு வேளை கண்ணகியும் கோவலனும், ஸ்த்ரீபுருஷசம்பந்த முள்ளவர்களென்று ஐயுறவென்ன காரணங்களவர்களுக்கிருந்தனவோ? அப்படியிருந்தும், சொன்னீ ரென்று கேட்கவில்லை. மரியாதையாய், அப்படியாயின் இப்படியிருத்தல் கூடுமோ? என்றனர். அப்படியும் அவர்கள் பிழையாகச் சொல்லவில்லை. கண்ணகி கோவலன் மனைவியல்லளோ? ஆதலிற் கவுந்தி சபித்ததற்கும், ஆசிரியர்

“தீமொழி கேட்டுச் செவியகம் புதைத்துக்
காதலன் முன்னர்க் கண்ணகி நடுங்க”,

என்றெழுதுவதற்குந் தக்கதோர் முகாந்திர மின்மையால், கவுந்தி சபித்தது அநீதியென்றே கொள்கிறோம். பிறகு, இவர்கள் உறையூர் புகுந்தார்கள்.

பி. ஏ. பிரணதார்த்தி ஹரசிவன்.

# உள்ளப் பயிற்சி.

---

## III, பாகுபாடு.

ஊன்றிய நோக்கம் நன்றே. அதனினும் நன்று நேரிய வூன்றிய நோக்கம், ஆயினும் இப்பிரபஞ்சத்தின்கண்ணே பல்வேறு வகைப்பட்ட பொருள்க ளிருத்தலால் அப்பொருட்டொகுதிகளை மனத்தி னதிகாரத்தினுள் வைத்தடக்கிச் சீர்ப்படுத்துவதற்கு ஏற்றதோ ருறுதியான வழியிலதாயின் உற்றுநோக்குந் திறமை அமிழ்ந்து கலக்கமுறுமென்ப தொருதலை. நாம் **பாகுபாடு** என்றுரைப்பதெல்லாம் இவ்வொழுங்குபடுத்தும் முறையையே யாம். கடவுள் பேரறிவின் தோற்றமாகிய உலகெங்கணும் அது தெளிவாய் விளங்குதலின் மனிதன் பகுத்தறிவினாற் கண்டுரைக்கக் கூடியதேயாம். இப்பாகுபாடு இறைவன் தன் பேரறிவினாற் பொருள்கள் யாவற்றினிடத்துஞ் சார்த்தி யிருக்கின்ற முதன்மையான வகுப்பொருமையைப் பற்றியதாம். வெளித்தோற்றத்திற்கெல்லாம் மிகவும் வேறுபடுவனபோலும் பொருள்களுட் பொதுத்தன்மை படைத்துக்காட்டலில் இவ்வொருமை தானே விளங்கும். நுட்பமாய் உற்றறிகிற கண்களினாற் பற்றப்பட்டுழி, இப்பொதுத் தன்மைகள், தாமே இவ்வுலகினிற் காணப்படும் மிகப் பலவகைய வேற்றுமையுள்ள பொருள்களையும் பெரிதுஞ் சிறிதுமாகிய அளவுள்ள பொதுவினம் சிறப்பின மென்றுரைக்கப்படுகிற சில ஈட்டங்களாகப் பகிர்வதற்கு உற்ற துணைகளாகும். பொருள்களைத் தேர்ந்து சீர்தூக்கி, ஒவ்வொன்றின் நலமிஃதென்றும் அலதிஃதென்றும் பகுத்தறியும் மனமுடையானுக்கு இவ்வினங்கள் தம்மியல்பிலேயே விளங்குவனவாம். ஆதலின், மாணாக்கனது முதற்கடமை, தான் காணு மனைத்தினுமுள்ள பொதுத்தன்மைகளைக் கவலையுடன் உற்று நோக்குதலையன்றி மிகவும் வெளிப்படையாய்த் தோற்றும் வேறுபாடுகளையும் குறிக்க வேண்டுவதே. ஏனெனில், விடயங்களின் வேற்றுமை நயங்கள், சாயல் ஒளியுடன் செல்லுதல்போலப் பொதுத்தன்மைகளோடும் ஒருதலையாய் உடனியலுகின்றன. அவைகள் தாமே ஒருண்மைப் பொருளாகாவிடினும் ஒரு பொதுவினத்தை மற்றொன்றினின்றும், ஒரே பொதுவினத்தின்க ணடங்கிய சிறப்பினத்தை மற்றையவற்றினின்றும் பிரிக்கின்றன. எல்லாப் பொருள்களின்கண்ணும் நாடவேண்டிய பாகுபாடல்லது முறை, **இயற்கை ஒழுங்கு** எனப்படும். மொழியகராதியின்கணுள்ள வார்த்தைகளின் ஒழுங்குபோலாதல், லின்னீயன் என்பவரது முறைமையின்படி நிலத்திணைப் பொருணூலிலுள்ள மலர்களின் நிரைபோலாதல், செயற்கை முறைப்பாடுகளெல்லாங் கற்கப்புகுபவர்களுக்குத் தொடக்கத்திற் பயன்படத்தக்க உதவிகளாகலாம். ஆயினும், தனித்து அவையிற்றையே சார்ந்து உபயோகித்தா லவைகள் மெய்யறிவுக்கு இடையூறுகளாயினுமாகும். இயற்கைப்

பொருத்தத்தி னியைபுகளின்படி பொருள்களைச் சேர்க்கும் பயிற்சியடைதலை ஒவ்வொரு சிறுவனும் குறிக்கொளல் வேண்டும். சிறப்பியல்புகளைப் பற்றிய நேரிய ஊன்றிய நோக்கத்தோடு பொது வினைவுகளைப் பற்றி நுனிப் புன்மேய்ச்சல் போன்ற நோக்கமும் கலந்திருந்தாலொழிய அப்பழக்க மடைதலியலாது. நீர்க்குமுதம் தனது பெயரினாற் குமுதவினத்தோடு உண்மையாகவே யாதோரியைபு மில்லாதிருப்பினும் அதன்கண் ஒருவகையா மென்பது தோற்றுவித்தல் போலச் சாமானிய சனங்கள் இட்டமலர்களின் பெயர்களும் புறத்தியலும் ஒற்றுமை பற்றியேயன்றி ஆராய்ச்சி முதிர்வின்கண் ஏற்பட்டனவல்ல. செடி கொடிகளின் குணத்தையும், உறுப்புக்களையும் நுட்பமாய் உற்று நோக்கிய நிலத்திணைப் பொருணூல்வல்லனே, அவ்வாறன்றி நீர்க் குமுதத்தைக் சசகசா வினத்தினுட் படுத்தி, தானவ்வாறு செய்தற்குத்தக்க காரணங்களையும் நமக்கு எடுத்துக் காட்டுவான். தேசசஞ்சாரம் மிகவும் எளிதாகிய இக்காலத்தில், உற்றுநோக்குதற் பயிற்சி அடைதற்கு உதவியாக, வாலிபர்கள் சமயம் நேரிடும்போதெல்லாம் தத்தமநாட்டின்கணுள்ள பொருட்காட்சிச் சாலைகளைப் போய்க்காண ஒருபொழுதும் தவறக் கூடாதென்றும், ஆங்குச் சென்றுழி, அவ்விடத்திற் குரித்தாகிய சிறப்புடைப் பொருளினிடத்திலேயே பொதுவாய்த் தங்கள் சிந்தையைச் செலுத்த வேண்டுமென்றும், யாம் அறிவுறுத்த வேண்டும்.

பொருந்திய வனைத்தையும் பொதுவி னோக்கினாற்
திருந்திய மனத்தினிற் சிறிது மில்லையாம்.

## IV. பகுத்தறிவு.

கவனமாய் உற்றுநோக்கி நன்றாக வகுக்கப்பட்ட விஷயங்களை ஆதாரமாகக் கொண்டு மனம் தர்க்கித்தல் என்னும் செய்கை முறையால் மிகவும் நுண்ணியதோர் கட்டிடம் கட்டத் தொடங்குகின்றது. பொருள்கள் இத்தன்மையன வென்றறிதலோடு, அவை அவ்வாறாத லெங்ஙன மென்றும், அவை எப்பயன் கருதினவென்றும் நாம் அறிய விரும்புகின்றோம். பொருள்கள்தமது பல்வகைப்பட்ட பொதுவும் சிறப்புமாகிய இனங்களின் வகுப்பொருமையிற் குறையாதவாறு தெய்வ உளத்தின் உண்மை யொருமைப்பாடு, பொருள்கள் நிலைத்துவளரும் செய்கை முறைகளில் ஓரின்றியமையாதவொற்றுமையை உண்டாக்குகின்றது. இறைவனிடத்தினின்றும் வெளிப்பட்டுத் தோன்று மன்னுயிர்களின் சிறப்பொருமையால், தெய்வவொருமை காரணமாகப் புலப்படும் இவ்விருவகைத் தோற்றங்களைப்பற்றியும் நாம் ஆராயவேண்டுவ தொருதலையாகின்றது. கடவுளினது பேரறிவினின்றும்வெளித்தோன்றும் நமது பகுத்தறிவு நமக்குரிய சிறியவாழ்க்கைகளின் செய்கை முறைகளில் ஓரொற்றுமையை, அல்லது, (யாவரு முணரச் சொல்லுழி),ஒழுங்கிணக்கத்தைச் செய்து காட்டுவதி லிடைவிடாது தலைப்பட்டுக்கொண்டி

ருக்கிறது. பாங்காக முன் உரைத்ததுபோன்று, இவ்வண்ணம், பகுத்தறிவிலும், பகுத்தறிவினாலும், பகுத்தறிவிற்காகவுமே நிலைத்திருக்கு மிவ்வுலகத்தின் செயலனைத்தினும் அவ்வகை யொருமையையும், இணக்கத்தையும், இன்றியமையாச் சார்பையும் நாடும்பொருட்டு இயற்கையாகவே நாம் தீர்மானிக்கின்றோம். பொருட்டொடர்ச்சியின்கண் இத்தகைய ஒற்றுமையை நாடுமாறு ஒரு மனிதனைத்தூண்டும் உள்ளத்தினியல்பைக் கபால வித்தகர் காரணத்துவ மென்பர். ஏனெனின் கடவுளினின்றும் தொடங்கிய ஆற்றல்களின் இன்றியமையாத தொடர்ச்சியின்கண், ஒரு பொருளுக்குச் சற்றுமுன் நேருகின்ற விடயமே, சாமானிய சனங்களால் அப்பொருளின் காரணமெனக் கருதப்படும். நன்கு விளங்காத கேவல விடயங்களைப்பற்றிய அறிவையே வழக்கமாய் உட்கொள்ளத்தக்கவாறு அவ்வளவு ஆழப்பதியாத மன நிறைவுடைய மக்கள் சிலர் உளர். இதுநிற்க, நாடோறும் நாம் காணுமாறு, ஒரு விஷயத்திற்குக் காரணங்காணாது மகிழ்ந்திருத்தலினும் அதற்கு ஏதேனும் ஒரு காரணத்தை உண்டென உடனே ஒப்புதல், சாமானியமானமானுட புத்தியினுக்குக் காரணநாட்டம் உற்ற வியல்பாமென்பதற்குத் தக்க சான்று பகரும். இவ்விடயத்திற் சிறுவர்கள் முக்கியமாய்க் குறிக்கொளல் வேண்டியது யாதெனின், உண்மைக் காரணத்திற்குப் பிரதியாக ஒரு பொருளுக்கு அகஸ்மாத்தாய் முற்பட்டுத் தோன்றிய ஒன்றனை மெய்க்காரண மெனக்கொண்டு எளிதில் மருளும் வழக்கத்தினால்* ஏமாந்து போகாமலிருத்தலேயாம். நமது தென்னிந்தியாவின் குடதிசைக் கடற்கரை நாடுகளிற் பெய்யும் அளவிறந்த மழைக்குக் காரணம் அராபிக்கடலின் அண்மையும், மேற்கு மலைத்தொடரின் உயர்ச்சியுமா மென்பது எளிதாய் விளங்கும். மழைக்காலத்தில் மதுரையின் சீதோஷ்ண ஸ்திதியை அதே காலத்திலுள்ள சென்னை அல்லது பெரியகுளத்தின் சீதோஷ்ண ஸ்திதியோ டொத்துப் பார்க்கும்போது, இவைகளினும் அது குளிர்க்குறைவாயிருப்பதற்குக் காரணம், மதுரை, நாட்டின் நடுவிலே இருப்பதும், சென்னை கடலடுத்திருப்பதும், பெரியகுளம் மலையடிவாரத்திலிருப்பதுமாமென உணர்தல் அரிதன்று. ஆயினும் விடயங்கள் மிகவும் கலந்து செறியப்பெற்றனவும், மனோவிகாரங்கள் பெரும்பான்மையும் வன்மை வாய்க்க பெற்றனவுமாகிய, ஒழுக்கவியல் அரசவியல்களில், தனக்கு அடிப்படையாயுள்ள விஷயங்களின் காரண விலயபை நிரூபியாது மேற்கொள்ளுகின்ற ஒருவகைத் தருக்க முறைக்கு உதாரணங்கள் அடிக்கடி காணலாம்.

'தன்னரசும், பிரபு வரசும் கலந்ததோர் துரைத்தனத்தினின்றுமே, இத்தேயத்தின் துன்பங்களனைத்தும் உண்டாகின்றன' வென்றும் 'குறைவற்ற ஒரு குடி அரசாட்சியை யேற்படுத்தி மந்திரவாதியின் கோலிற்

* இதனை ஏதுப்போலியென்றும், போலிக்காரண மென்றுங் கூறுவர் தருக்க நூலார். (Fallacy of non causa pro causa.)

போல ஒரே அடியில் அவையனைத்தையும் நீக்கலாகும்' என்றும், தான் அறிவித்த அபிப்பிராயத்தைப் பல முகமாகப் பல்வகை உதாரணத்தோடு வலியுறுத்திக் கூறிய ஒரு பெயர் பெற்ற குடித்தலைவன் இராசாங்க விஷயமாகச்செய்த பிரசங்கத்தை யாம் ஒரு முறை செவிசாத்தினோம். மனித சமூகத்தில் உண்டாகிய தீங்குகள் அனைத்திற்கு முற்ற மானசீகமானதோர் போலிக்காரணத்தையும் அது போலவே மானசீகமானதோர் போலித்தீங்கொழிவழியையும் மேற்கோடலாற் புரைபட்டதோர் விவாதம் இஃதென்பது நன்கு புலப்படும். சிறுவர்களுக்குத் திருந்திய தர்க்கவாத வழக்கப் பயிற்சியில், முன்காலத்துப் பிளேடோ வென்னும் புலவர் பெருமான் குறித்தவாறு, சிறிது காலம் திட்டமான கணிதப்பயிற்சிக்குட்பட வேண்டுமென்று, அவர்களுக்கு, நிச்சயமாகவே யாம் முதலில் அறிவுறுத்துவோம். எவ்விதத் தருக்கவாதத்திற்கும் இன்றியமையாததாகிய மனவுறுதி பயக்கும் சக்தியை இது வலியுறுத்தும். அன்றியும் இன்றியமையாப் பற்றுக்கோடு, நீக்சரிய தொடர்ச்சி, அல்லது தனிக்காரணத்துவம் என்ற இவற்றின் பொருள் என்ன வென்று அநுபவம் இல்லாதார்க்கு மெய்ம்மையாய் உணரவும் போதிக்கின்றது. ஆயினும் அவர்கள் இவ்வளவில் நிற்கக்கூடாது. மிக்க நுட்ப அறிவினருஞ் சில வேளைகளில் திருத்தமாகக் கணக்கிடத் தவறத்தக்க பல் வேறு மாறுபாட் டியல்புகளுக்குட்பட்டு வினோதமாய்த் தமக்குள்ளே செய்தும் செய்வித்தும் நிகழும் விஷயங்களும் ஆற்றல்களுமாகிய இவற்றின் செறிவை ஆதாரமாகக்கொண்ட மங்களது முடிந்தகொள்கையிற் சிறந்ததும் மிக முக்கியமானதுமாகிய ஒரு பகுதிக்குக்கணித நூலின் தர்க்கங்கள் ஒரு பொழுதும் பயிற்சி முறை ஆகா ; ஏனெனில் அவைகள் நூல்நெறிக் கோட்பாடுகளையும் சங்கேதங்களையுமே மூலமாகக் கொண்டிருத்தலால் ஒருவாறு மொழிந்த பிறகு வேறுபடுதற்பாலன அல்லவாம். இராசாங்கநீதி சனசமூக விஷயங்களில் நமது வாதங்கள் கணித நூலின்கணுள்ள நியாயங்களினும் உறுதிக்குறைவு உடையனவல்ல. மற்று அவைகளினும் மிகக்கடினமாயும், விரிவாயுமுள தம்மனோவிகாரங்களும் தம்பக்கநிறுவும் வேட்கையும் ஆகிய இவை காரணமாக எழூஉம் ஒருபுறநோக்கம், விரைந்துரை, முடிவு, மனக்காட்சியின் மருட்கை ஆகிய இத்தகைய பெருந்தீங்குகளையே பரிகரிக்க வேண்டும். அரசியலுக்குரிய ஐயப்பாட்டின் காரணத்தைக் கண்டு தெளிதலில் அவ்வியல் வல்லோன் தவறுவானாகில் அது நூலின்கண் உள்ள ஐயப்பாட்டினாலன்று ; மற்று, விஷயங்களைப்பற்றிய உணர்ச்சிக் குறைவினாதல், அவற்றைப்பற்றிய நேரிய நன்மதிப்புக் கொள்ளாதவாறு தடுக்கும் மனோவிகார வேட்கைகளின் செயலினாதல், தவறலாம்.

(இன்னும் வரும்.)

ச. கி. சுந்தராசாரியன்.

# கல்விச் செல்வம்.

" எண்டருநா லெண்பத்து நான்கு நூருயிரத்தோடுண்டுபல் யோனி யெல்லா மொழித்து" ஆழாழியைக் கையினுல் நீந்திக் கரையதனைக் கண்டா லன்ன அத்துணைச் சிறப்புடைத்தாய இப்பெறலரு மானிடயாக்கையைப் பெற்ற மாண்பினர் யாவரும், சின்னுளிருந்து பின்னு ளழிவுபடும் இழிந்த தன்மைத்தாய், யார் மாட்டும் நில்லாது சகடக்காற்போல மாறிமாறி வரும் பொருட் செல்வத்தை யெட்டுணையும் பொருட்படுத்தாது, அறம் பொருளின் பம் வீடெனும் புருஷார்த்தங்கள் நான்கினையும் ஆண்பெண்ணெனு மிருபா லார்க்குங் கொடுத்தற்குப் டெரியதோர் கருவியாய்ப் புகழை நிலைநாட்டிக் கவலையேதேனும் வந்துழி, உடுக்கை யிழந்தவன் கைபோல் வந்துதவுந் தன்மைத்தாய கல்விச் செல்வத்தைக் கைக்கோடலே சிறப்புடைத்தாம். அத்தகைய கல்விச் செல்வத்துக்கு வரையறையொன்று மிலதே. பூர்வம் இங்கிலண்டில் கிரீக் லத்தின் பாஷையிற் கொஞ்சம் கற்ற வொருவனைக் கல்விமான் என மதித்தனர்; இந்தியாவில் ஸம்ஸ்கிருதங் கற்றுச் செய்யுள் செய்யவல்லானைக் கலைவலோனெனக் கொண்டாடினர்; ஆனுல் இப்பொழு தோ, பாஷையின் இலக்கண விலக்கிய ஆராயச்சியில் தேர்ந்திருத்தலே யன்றிக் கல்வியின் பிரிவுகளாகிய உளனூல், உடனூல், தருக்கநூல், தத்துவ நூல், கணிதநூல், முதலிய பல நூல்களிலும் இயன்ற வளவு கற்று,

" தொட்டனைத் தூறுமணற் கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு"

என்றபடி அறிவைக் கூடுமானவரை விருத்தி செய்தலே சரியானபடி கல்வி யைக் கற்ற லாகுமெனக் கூறுகின்றனர். உலகத்தில் நல்லார் குறைந்தும் தீயார் மிகுந்து மிருத்தல்போலப் புத்தகங்களிலும் உத்தம புத்தகங்கள் ஸ்வற்பமாயும் அதம புத்தகங்கள் எண்ணிறந்து மிருக்கின்றன. குளிக்கப் போய்ச் சேறு பூசிக்கொள்வது போலன்றி, அவற்றுள் உத்தம புத்தகங் களையே தெரிந்தெடுத்து வாசித்தல் வேண்டும். அங்ஙனம் வாசிப்பதிற் பன்னுடை யொத்துக்குற்றத்தைக் கொள்ளாது நீரைப்பிரித்துப் பாலைப்பரு கும் அன்னமொத்துக் கோதொரீஇக் குணத்தையே கொள்ளல் வேண்டும். நாம் அநேக புத்தகங்களை வாசிப்பதின் முக்கியக் கருத்தாவது நமது அறிவை விருத்தி செய்து அதனுல் ஞானத்தை அடைவதற்காகவே யன்றி வேடிக் கையாகப் பொழுதைப் போக்குவதற்காகவன்று. இங்ஙனம் பொழுது போக் காகப் புத்தகங்களைக் கவனமின்றி வாசிப்பவர் முனைப்புல் மேய்ந்து செல் வரேயன்றி உண்மைச் சுவையினை யொருநாளும் அறியார். புத்தகங்களின் உண்மைப் பயனையடைய விரும்புவோர் முதலாவது அந்நூலிலுள்ள விஷ யங்களை நன்கறிந்து கொள்ளல் வேண்டும்; பின்னர் அந்நூலையாக்கியோ

னது கருத்துக்களைப்பற்றி யாராய்ச்சி செய்தல் வேண்டும். வாசிப்போரது புறக்கண்ணுக்குத் தோற்றாது அகக்கண்ணுக்கு மட்டில் அகப்படுமாறு பல நுண்ணிய விஷயங்களை மறைபொருளாய்க் கூறுவது நூலாசிரியரது வழக்கம். அத்தகைய அரிய பெரிய நூல்களை ஆழ்ந்த கருத்துடனும் தீர்க்க யோசனையுடனும் உற்று நோக்கிப்பொருள் கொள்ளல் வேண்டும். அல்லாக்கால் தத்தம் மனம் போன வாறெல்லாம் பொருள் கொண்டு ஆசிரியர் கருத்துடன் முரண்பட்டிடர்ப்படா நிற்பர்.

தொடங்குங்காற் றுன்பமாயிருப்பினும் இறுதியில் இன்பம் பயப்பது கல்வியேயாம்; அன்றியும் பலவகைத்தாய செல்வங்களுள்ளும், கேடில்லாத விழுமிதாய செல்வம் கல்விச்செல்வமே யன்றி ஏனையவையல்ல. யாங்ஙனமெனிற் கல்விச் செல்வமுடையார் கொடையிற் கர்ணனிலும் மேம்பாடுடையராவர். கல்விச்செல்வம் பொருட் செல்வம் போன்று கொடுக்கக் கொடுக்கக் குறையாது மேலும் மேலும் விருத்தியாகும். பொருட் செல்வத்தைப் பெற்றோருக்கு அப்பொருளே பெரியதோர் துன்பமாய் முடியும். அன்னோர் மனத்துள் தம்பொருளைக் கள்வர் கவர்வரோ, பங்காளிகள் பகிர்வரோ, என்னும் எண்ணங்க ளெஞ்ஞான்றும் குடிகொள்ளும். பிறந்த காலையிற் கொண்டு வந்த தொன்றுமில்லை; பிறிது மிறந்த காலையிலுடன் செல்லும் பொருளுமில்லை யென்றோராது குறைந்துவிடுமே யென்னும் பயத்தால் தானுமனுபவியாது மனமொப்பிப் பிறர்க்குங்கொடாது "பாடு பட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக் கேடுகெட்ட மானிட'ராவர். தனங் காக்கும் பூதத்துக்கும் இவருக்கும் யாது வித்தியாசம்? கல்விப் பொருளோ அற்றன்று. இதற்குக் கள்வராதி பகைவரிலர். கல்வியைப் பெற்றோர் இம்மையில் தேருந்தோறும் நூல்களிலுள்ள சொற்சுவை பொருட்சுவைகளை யகமகிழக்கண்டு மறுமையிலு முயர்சதியெய்தி யெந்நாளும் இடையறுவின்பத்தை நுகர்வர். செல்வத்துக்கு நீராலும் தீயாலும் அழிவுண்டு; கல்விக்கு அத்தகைய அழிவு ஒரு நாளுமின்று. பொருட் செல்வமானது புத்திரர் மனைவியர் மனத்துள்ளும் பொறாமை யென்னுமொரு பாவியைக் குடியேற்றி அவரால் தமக்காபத்தையே விளைவிக்கும். கல்விச் செல்வமோ அன்னார்க்கு நற்புத்தி கூறி அவரை நன்னெறியில் நிறீஇத் தமக்கு வரும் அபாயத்தைப் போக்கும் உபாயத்தைக் கொடுக்கும். செல்வப் பொருள் அது கொடுபடுங் சில்லோர்க்குப் பயன்படுமே யன்றிப்பல்லோர்க்கும் பயன்படக் கூடியதன்று. கல்விப் பொருளோ ஒரு விளக்கிற் பல விளக்குக்களும் அவற்றினின்றும் பற்பல விளக்குக்களும் ஏற்றிக் கொள்ளுமா ஒருவருக்குக் கொடுக்கின், அவர் பலருக்கும், அவர் பற்பலருக்குங் கொடுக்க, எண்ணிறந்தவருக்குப் பயன்படும். செல்வத்தைப் பிறருக்குத் தானஞ்செயின், அதனைப் பெற்றவர் உழைப்பின்றிப் பெற்றமையின், "தான் வருந்திப் பெறுத பொன்னுக்கு மாற்றுமில்லை யுரையுமில்லை" யாதலால் பொருளைத்

தீயவழியிலிறைத்துத் தாமுங் கெட்டுத் தம்மைச்சார்ந்தோரையும் குடியரா யுங் கூத்தியராயு மாக்கிவிடுவர். கல்விப்பொருளைக் கொடுக்கின், அதனைப் பெறுபவர் தீயரேயாயினும், அவர் பெறுங் கல்வியால் அவரது அஞ்ஞான மானது ஒளியைக் கண்ட இருள்போல் நீங்க அவரது தீக்குணத்தீச்செயல்களை யொழித்து நன்னிலை யெய்துவர்; அன்றியுமவரைச் சேர்ந்தோரையும் சன் மார்க்கத்தில் நிறுத்த முயல்வர். செல்வப் பொருளைக் கொண்டார்க்குத் திருப்தி யென்பதே கிடையாது. "தம்மின் மெலியாரை நோக்கித் தம துடைமை, யம்மா பெரிதென் றகமகிழ்க" என்பதை யொருநாளு மோரார். அன்னோர் "ஆசைக்கோரளவில்லை யகிலமெல்லாங் கட்டியாளினுங் கடன் மீதிலே" என்றபடி தமது ஆசைக்கு யாதும் வரையறையிலாது விடுத்துப் பொருளோ பொருளோ வெனப் பொருட் பைத்தியங்கொண்டு 'ஊரை யடித்து உலைவாயிற் போடவே' நோக்கங்கொண்டிருப்பர். கல்விச் செல்வங் கொண்டாரோ, தம்மிடம் பிறர் கற்றுங்கேட்டும் பயன்படுமாறு தம்மா லியன்றவரை உதவுவரே யன்றித் தாம் மட்டிற் சாரதாபீடமாயும் கல்விக் களஞ்சியமாயும் பிறங்க, ஏனையோர் சுத்த சூனியராய் மூட சிரோமணிகளா யழிந்துவிட வேண்டுமென்று ஒருபொழுதுங் கருதார். செல்வத்தைக் கைக் கொண்டோர் கல்விப் பொருளைத் தேடாது விடுவரேல் அன்னோர்க்கு அகக்கண்ணில்லாது போதலே யன்றி முகக்கண்ணு மொளியிழந்துபோம். கல்விசால் புலவரேனும் அன்பொழுக்கங்களிற் சிறந்த பெரியவர்களேனும் இவர்களைக் காணவரின் அவர்களைக்காணாததுபோலப் பாவித்துக் கண்ணிலி குமரராய் வணங்கா முடியராய், முகத்தைத்திருப்பி எக்கழுத்தத்துடன் அண்ணாந்திறுமாந் தேப்பம் விட்டு நிற்பர். அந்தோ! அஞ்ஞான மென்னும் இருளானது நல்லோரது முகதரிசனமுஞ் செய்ய வொட்டாது இவர்க ளுடைய் கண்களை மறைக்கின்றதோ அல்லது,

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்"

என்னும் நாயனார் அருமைத்திருவாக்கின்படி இவரது கண்கள் உண்மையாக வே ஊனக்கண்களாய் விட்டனவோ அறியோம். கல்விப்பொருள் கொண் டவரோ, பெரியவர்களையும் அறிவுடையாரையும் கண்டுழிமிகவும் மனமகிழ் ந்து முகமலர்ந்து அவர்களுக்கு இன்சொற்கூறி யுபசரித்து 'அடக்கமமரரு ளுய்க்கு' மாதலின் மிகவும் அடக்கத்துடனிருப்பர். செல்வப்பொருளுடை யாருக்குத்தம் நாட்டில் மட்டும் சிறப்பும் தம் பரிஜனங்களிடத்து மட்டிற் செல்வாக்கு முண்டு. கற்றவர்க்கோ 'சென்ற விடமெல்லாஞ் சிறப்பு'. "யாதுமெனநின்னைக் கைப்பிடித் தோர்தமக், கெதுவு நன்னாடே! எதுவு நல்லூரே!!" என்றார் நந்தம் ஆசிரியர் பரிதிமாற்கலைஞனாரும். செல்வப்பொ ருள் விரைவிலழியுந் தன்மைத்தாதலின், அழிந்த அக்கணத்திலேயே பெற்ற

தாயும் வேண்டாள்; உற்ற மனைவியும் வேண்டாள். கல்விப்பொருளோ என்றும் அழியாது ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யெழுமை யெழுபிறப்பும் போயுதவும்.

கல்வி யில்லாதவர் மக்களுட்பதராவர், இவர் பெரிதும் பயனில் சொற் பாராட்டுதலின். யாவரு மில்லாதவிடத்து அசுவமேத யாகம்புரிதலாகக் கற்றவரில்லாத விடத்துக் கல்லாதவர் வாய்க்கு வந்தபடி பிதற்றலாமே யொழியக் கற்றோர்முன் வாய்திறத்தல் தமதறியாமையைப் பறையறைந்து காட்டுவதொக்கும்.

> " கல்லா தவரு நனிநல்லர் கற்றோர்முற்
> சொல்லா திருக்கப் பெறின்"

என்றார் நாயனாரும். இவர்களுக்கென்றே மௌனத்தை மலரவன் படைத்துள்ளான். இன்னோர் கற்றவ ரவைக் களமேறுவது கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றன்றே. கற்றவருக்கு அக்கல்வியே பொலிவு நிறைந்த அணிகலனாகும். அன்னோருக்கு மற்றோரணிகலன் வேண்டாவாம். செல்வப் பொருளுடையார் கல்விப்பொருளும் பெறுவரேல், பொன்மலர் மணங் வீசினாலொப்பச் சிறப்படைவர். கல்விப்பொரு ளில்லாதவரிடத்துண்டான செல்வமானது பத்தடுத்த தீமைத்து.

> " நல்லார்கட் பட்ட வறுமையி னின்னாதே
> கல்லார்கட் பட்ட திரு"

என்றார் பொய்யில் புலவரும். அளவிடற்கரிய இக்கல்வியின் பெருமைகளை இங்ஙனம் ஒவ்வொன்று யெடுத்துக்கூறின் முடிவுபடுந்தகைமைத்தோ ? கல்வி யுடையவனே மனிதனெனப் படுவான். ஏனையோர் நன்மரமாவர். கல்விச் செல்வமே செல்வமெனப்படும். ஏனைய செல்வமெல்லாம் 'செல்வம்' (செல்லுவோம்) எனக்கூறிமாயுந் தன்மையவாம்.

இத்துணைச் சிறப்புடைத்தாய கல்வியைக் கற்று அதன்படி அணுவுந் தவறாது ஒழுகல்வேண்டும்.

> " கற்க கசடறக் கற்பவை கற்றபி
> னிற்க வதற்குத் தக."

கற்றபடி ஒழுகாரேல், இவர் பெற்ற கல்விப்பொருளால் யாதுபயனோ ? ஆடையுடுத்து மேடை மீதேறிப் " பொய் புகல்வதினும் பெரிய தொருபாவமில்லை" யென வாய்ப்பறையறைந்து, பின்பு இவரே பொய்சொல்லப் புகுவாரானால், குங்குமஞ் சுமந்த கழுதைக்கும் இவருக்கும் யாது வித்தியாசம்? கல்வி கற்று அதன்படி யொழுகாதவனைப் பின் பற்றுவது அம்மி துணையாக யாறிழிந்தவா றொக்கும். ஆகவே கல்வி கற்றலும் அதன்படி நிற்றலும் இன்றி யமையாதவை ஆயினும் ' கல்வி கரையில கற்பவர் நாட்சில, மெல்ல

னைக்கிற் பிணிபல' வாதலின் சகல பாஷைகளிலும் வல்லவராய் விடுவ மென்பது முடியாத காரியம். இக்காலத்திற் கலைபயில்வோர் பலரும் பொருளீட்டற்குத் துணைக் கருவியாகிய ஆங்கிலத்தையே பயில்வாராகின்றனர். கனம் பொருந்திய சர்வகலாசாலையார் சுயபாஷை யென்பதொன்றை யுடன் சேர்த்திராவிடில், இப்போது கலாசாலையிற் பயிலும் மாணவரிற் பலர் தமது சுயபாஷை யின்னதென்பதையும் சிறிது காலத்தில் மறந்துவிடுவர். சுயபாஷை யென்பதொன்றுண்டோ வெனவும் ஐயுறுவர். பரீக்ஷைகளில் தேறுவதற்குத் தமிழு மின்றியமையாத வொன்றாக நியமிக்கப்பட்டுண்மையின், இற்றை ஞான்று தமிழ்மணமானது சற்றேனும் கமழ்கின்றது. இப்போதையமாணவர்கள் கலாசாலைகளில் தமிழ்கற்கும் முறையை அம்மவோ! என்னென்றுரைப்பது? இவர்களிற் பலர்க்குத் தமக்குப் பாடமாயுள்ள இலக்கணத்தை நன்னூலெனக்கூற நாவெழாது தீயநூலெனக் குழறிக்களிப்பர். தமிழைப்பற்றிச் சொல்லுங் கூற்றெல்லாம் இவர்க்குக் கூற்றுவனாகவே தோற்றும். பரீக்ஷை நெருக்கத்திற் சனியான தமிழுடனும் அழவேண்டுமே என மனம் வருந்திப் பரீக்ஷையில் தேறவேண்டிய அவ்வளவுக்கு மட்டில் தட்டித்தடுமாறிக் கொஞ்சங் கொஞ்சமாய்ப் படித்துத் தொலைப்பர். செந்தமிழ்பயிலும் என்னரிய நண்பர்காள்! சற்றுச் செவிசாய்ப்பீராக! நாம் பிறந்ததும் வளர்ந்ததும் தமிழ் நாடன்றோ? நாம் வீட்டிற் பேசியதும் பேசுவதும் இனிய தமிழன்றோ? திரைகடலோடித் தூரதேசம் போயினும் பிறந்த நாடெனில், ஆர்வமும் அன்பும் அச்சுயநாட்டின் மீதுண்டாவது யாவருக்கும் இயற்கையேயன்றோ? அஃதேபோல் ஆங்கிலங்கற்று ஆனந்தக் கூத்தாடினும், சுயபாஷையின் மீதுள்ள ஆர்வத்தை யெட்டுணையேனும் மறப்பது சாலுமோ? செந்நலங்கனிந்து கட்டழகுவாய்ந்த இன்பவல்லியைக் கடிமணம் புரிந்து களித்திருக்கும் காளையரும், ஈரைந்து மாதம் வருந்திப் பெற்றுச் சீராட்டித் தாலாட்டி வளர்த்த அன்னைக்குத் துயரெனில், அரைக் கணமுந்தரியாது அன்பும் ஆசையும் பிடர்பிடித்துந்த விரைந்து சென்று உதவுவரோ? அன்றித்தாழாத் தளராத்தலைநடுக்காத்தண்டேன்று வீழா விறக்கு மிவண்மாட்டு நாமேன் கவனம் செலுத்தல் வேண்டு மென்றயர்ந்திருப்பரோ? இதனை நீவிரே சற்று ஆராயுமின். ஆங்கிலத்தால் ஆயிரமாயிரமாய் வரினும் தமிழால் வருவது வறுமையே யெனினும், தொண்டை நாதனைத் தூதிடை விடுத்து, முதலையுண்ட பாலனையழைத்து, எலும்பைப் பெண்ணுருவாக்கி மறைக்கதவினைத்திறந்த கன்னித்தண்டமிழ் எனச்சிறப்பு வாய்ந்த நம் தமிழன்னைக்கு இற்றை ஞான்று குறையெனின், இனி அரைக் கணமும் நாம் சும்மாவிருத்தல் சாலுமோ? ஆகையால் மாணவர்காள்! எழுமின்!! எழுமின்!!! நம்பால்வரும் பழிக்கு இடங்கொடாது இனியேனும் தமிழை அன்புடன் பயின்று அதன் விருத்தியை நாட முன் வருமின்!

சேய்யூர்-முத்தைய முதலியார்.

# அத்துவித வாக்கியத் தெளிவுரை.

அற்றேற் கருடபாவனை செய்வோன் கருடனாதல் கண்டிலம், அப்பாவனையால் விடந்தீர்தல் கண்டனமாகலிற் போலிப்பாவனையும் பயன்படுமென்பது பெறப்படுமாலெனின், அறியாது கூறினாய், மாந்திரிகன்றன்னுடம்பைக் கருடனாகப் பாவிப்பானல்லன், மற்றென்னையோவெனின், கருடனுக்கதிதெய்வமாக நிற்குமந்திர மூர்த்தியாகத் தன்னான்மாவைப் பாவிப்பன், அங்ஙனம் பாவித்தவழிச் சார்ந்ததன் வண்ணமாய் நிற்கு மியல்புடைய வான்மா வாண்டம் மந்திர ரூபியாய் நிற்றற் கிழுக்கின்மையின் அது பற்றி யாசங்கையின்மையுணர்க. இன்னும் பாவனைகளு முபாசனங்களுங் கற்பித்துக்கொண்டு செய்யும் போலி யென்றன் மாயாவாதி கூறுங்கூற்றாதலின், அது சைவசித்தாந்தத்திற் கேலாமையறிக. அற்றேல், ஆன்மாச் சார்ந்ததன் வண்ணமாய் நிற்கு மியல்புடைய னென்றற்கும், அதனானே தன்னாற் கணிக்கப்படு மந்திர ரூபியாய் நிற்பனென்றற்கும் பிரமாண முண்டாயினன்றேயது பற்றிக் கருடபாவனை முதலாயின வுண்மைப்பாவனை யென்று கொள்ளப்படும் ; ஆதலினிவற்றிற்குப் பிரமாண மென்னையெனின்;—சர்வ ஞானோத்தர முதலிய ஆகமங்களே பிரமாணமெனவறிக. அஃதெங்ஙனமெனிற் காட்டுதும்:—சர்வ ஞானோத்தரத்திற் பசுவும், பாசமும், அதிகாரஞ்செய்திருப்பதாகிய பதியும், அதிகாரத்தி னொழிந்து தன்னியல்பி னிற்பதாகிய சிவமு மெனப்பதார்த்த நான் கென்றெடுத்துக்கொண்டு, அவற்றிற்குத் தனித்தனி யிலக்கணமுணர்த்திப் பின்னது கேட்ட ஆறுமுகக்கடவுளுக்கு, அங்ஙன மப்பிரமேயமாய், ஒன்றோடுவமிக்கப்படாததாய், அதிசூக்குமமாய், வியாபகமாய்த் தன்னியல்பினிற்குஞ் சிவத்தை யறியுமாறெங்ஙனமென்னு மாசங்கை நிகழாமைப் பொருட்டுச் சிவப்பொருளத் தன்மைத்தாயினும், அதனை யறிதற்குபாயங் கூறுகின்றாம் ; அவ்வுபாயம் வாதிகளெவரானுமறியப்பட்ட தன்றாய்க் குரு பரம்பரையினறியப்படுவது ; ஒருவருக்கும் யாங் கூறினேமல்லேம் ; அதனை நீ கேட்பாயாக வென்றதன் பெருமையையெடுத்துக்காட்டி அனாதி முத்தனாய் நின்ற சிவனுக்குரிய தன்மைகளும், அத்தன்மையனாகிய சிவனே நானெனச் சிவோகம் பாவனை செய்யுமாறும், அவ்வாறன்றித்துவித பாவனை செய்தாற் படுமிழுக்கும் விளங்க விரித்துணர்த்தித்துவித பாவனையைக் கைவிட்டுச் சிவோகமென அத்துவித பாவனை செய்வோன், ஏகதேசமாய் நின்றறிவதாகிய சிற்றறிவினீங்கி, முழுதும் வியாபகமாய் நின்றறிவதாகிய முற்றுணர்வு விளங்கிச் சிவனை யறிந்து தான் சிவனேயாவனெனச் சிவனையறிதற் குபாயங்கூறிப்பின்னது கேட்ட ஆறுமுகக்கடவுளுக்கு மேலுத்தேசங் கூறும்வழியும், இலக்கணங் கூறும் வழியுஞ் சிவனுமான்மாவு மிருபொருளென வைத்தோதுதலிற் சிவனின் வேறா

கிய வான்மா சிவோக மெனப்பாவிக்கும் அத்துவித பாவனையாற் சீவ னேதானாக ஐக்கியமாமாறெங்ஙன மென்றுசங்கை நிகழாமைப் பொருட்டு, ஆன்மாத் தன்னியல்பே யறியாது பசுத்துவத்தோடு கூடிய வழிப்பசுவாய் நின்றான், அதுபோலத் தன்னையறிந்து சிவத்துவத்தோடு கூடியவழிச் சிவமாய் நிற்பதற்கையமில்லை, ஆதலாற் றன்னையுந் தலைவனையும் அபரபர பேதத்தானுந் தூலசூக்கும பேதத்தானு மெப்பொழுதும் பயின்றறிதல் வேண்டுமென்றோதினீர்; அற்றேல், ஆன்மாவி னியல்பு தனித்து நில்லாது பசுத்துவத்தோடுகூடிய பசுவெனவுஞ் சிவத்துவத்தோடுகூடிச் சிவமென வும் பல தன்மைப்பட்டு நிற்குமா றென்னை யென்று மீளவுமையுறுமைப் பொருட்டு அதவா வொன்றெடுத்துக் கொண்டு தெளிவு பிறவாது மீள மீள மயங்குதற் கேதுவாகிய வார்த்தைகளை விகற்பித்திங்ஙனம் பலவாகச் சொல்வதென்னை யெனக்கூறி யொழித்தெல்லாச் சங்கைகளு நீங்கித் தெளிவுபெறுதற் கேதுவுந் தொகுத்தொரு வார்த்தையி னுணர்த்துவான் புகுந்து "சர்வோதருமம்" என்றருளிச் செய்தார். இதன்பொருள், ஆன்மா அங்ஙன மிருதன்மைப் படுமாறென்னை யென்றையுறு தெல்லாப் பொருளின் றன்மைகளு மான்மாவுக்குளவாம்; அஃதெங்ஙனமெனின் ஆன்மா வெத னையா னெனப்பற்றினான் அதனதன் சுபாவமே தன் சுபாவமாந் தன்மை யுடைமையான் (யுடையான் என்பதூஉம் பாடம்) அதுவதுவாயே நிற்ப னென்றிங்ஙன மான்மாவை யறியுமாறு தொகுத்துக் கூறினாங்கண்டு கொள்க வென்பதாம். இங்ஙனந் தொகுத்துணர்த்தி, இன்னு மிவ்வாறறியு மான்ம ஞானத்தின் பெருமையும் அதனாற் பெறும் பேறும் அதனை யறிதற் குபாயமும், அறிந்தானது பெருமையும் விரித்துக்கூறி யிதற்கு மேற்சொல லற்பாலது சிறிதுமில்லை, ஆகலான், மனோவிகற்பங்களை யொழித்திங்ஙன மதனுண்மை யறிந்துபாயங்களைச் செய்வோன், இங்கே சீவன் முத்தனாய் அகம்புறமெங்கும் வியாபித்துத் "தத்தருமிதருமியாதருமி" யெனப்பட்ட முற்றுணர்தன் முதலிய வெண் குணங்களையுடையவனாய் (யுடையனாய் என்பதூஉம் பாடம்) இங்ஙனஞ் சிவத்துவத்தைப் பெற்றுச் சிருட்டிப்படுந் தன்மை முதலிய வின்றிச்சிவசமமாவன். இத்தன்மை யுடையவனுக்குத் தவம், செபம், தியானம், பூசை முதலிபன வொன்றும் வேண்டா; சத்திய முக்காலுஞ் சத்தியம்; இதற்கு மேலறிதற்பாலன வொரு நூலினுமில்லை யென வலியுறுத்திப்பின்னு மான்மா வெல்லாவற்றினும் அதுவதுவாய் நிற்கு மாற்றைப் பூதான்மா முதலறுவகைப்படுத்தி விரித்துநின்று கூறுதுங் கேட்பாயாக வென்றெடுத்துக்கொண்டு, பூதபரிணாமமாகிய வுடம்பினியல் புகளும், ஆன்மா அவ்வுடம்பைப்பற்றிய வழிப் பூதான்மாவென நிற்குமா றும், அகத்தின் கண்ணவாகிய வாக்குகளினியல்பும், ஆன்மாவவற்றைப் பற்றி யந்தரான்மாவென நிற்குமாறும், சூக்கும பூத முதலிய தத்துவங் களினியல்பும், ஆன்மா சுத்த தத்துவங்களைப் பற்றியவழித் தத்துவான்மா வென நிற்குமாறும், தத்துவங்களுள்ளும் ஆன்மா வெவ்வேறு தத்துவங்

களைப்பற்றிய வழி யவ்வத்தத்துவ மயமாயே நிற்பனென்பதூஉம் (னென்பதும் பாடம்), ஆன்மாப் போத்துருத்துவ (போத்திருத்துவ பாடம்) மெய்திப்புருடதத்துவனென நிற்கு மியல்பும், அங்ஙனம் புருடதத்துவ மயமாய் நின்று பிரகிருதி குணங்களைப்பற்றி யின்பதுன்பங்களை நுகரும் வழிச்சீவனென நிற்கு மென்பதூஉம், சுரர், நரர், விலங்கு, புள், தாவர மெல்லா வற்றிற்கு மதி தெய்வங்களுள வெனவும் தாவரசங்கமங்களுண் மந்திரங்களா னதிட்டிக்கப்படாத வுயிர்களில்லை யெனவும், மந்திரங்களையுச்சரிக்கு முறைமை யிவ்வாறெனவும் இவ்வாறு மந்திரங்களி னியல்பும், அவ்வம்மந்திரங்களைக் கணிப்புழியான்மாப் படிகம்போல அவ்வம் மந்திர மயமேயாகி மந்திரான்மாவென நிற்குமாறும், அதனின் வேறாகிய விவ்வை வகைப் பெயரு நீங்கியவழி மேற்கூறியவத்துவித பாவனையாற் பரமான் மாவென நிற்றல் சித்தென்று சாதிப்பொதுமைபற்றி யிப்பற்கை யாதலுந் தெரித்துணர்த்தி, இங்ஙனமாகலான் அத்துவித பாவனையுடையோன் ஞானக் கண்ணினாற் சிவனை யான்மாவிற் கண்டு முழுதும் வியாபகமாய் நின்றறிவதாகிய முற்றுணர்வுடையவனாய், அவ்வப் பொருளியல்பெல்லா மறிந்து மலவாசனை நீங்கிக் கேவலமாய் நின்று முடிவுகாண்கில்லாப் பேரின்பத்தைப் பெறுவானென முடிந்தது முடித்துக்காட்டி யிங்ஙனம் ஸ்ரீகண்டருத்திரக் கடவுள் ஆறுமுகக் கடவுளுக்கு ஞானபாகஞ் செவியறிவுறுத்தருளினர்; இன்னு மிதனையிங் குரைத்தவாறு பற்றி விரித்துரைத்துக் கொள்க.

இவ்வாகமத்துளித்தனை வலியுறுத்திச் சிவனோ டொற்றுமைப்பட நின்று தன்னைப் பாவிப்பதாகிய ஆன்மஞான மோனமொன்றே யப்பிரமேயமாயொன்றா லுவமிக்கப்படாது நின்றவச்சிவனை யறிதற்குபாய மென்றும், அங்ஙனம் பாவிக்கவே யச்சிவனோ டொற்றுமைப்பட்டுப் பேரின்பத்தைப் பெறுவானென்பதும், அசுத்தப்பொருளோ டொற்றுமைப்பட்டு நிற்குமாறெங்ஙன மென்னுமைய நீக்குதற்குத் தொகுத்தொரு வார்த்தையாற் கூறுதுமென்றெடுத்துக் கொண்டு ஆன்மாவெதனை யெதனையானெனச் சார்ந்தா னதனதன் சுபாவமே தன் சுபாவமாய் அது வதுவதுவாய் நிற்பனென்று கூறியிங்ஙன மேவலாற் சிவனோ டொற்றுமைப்பட்டு நிற்புழிச் சிவன் குணங்களாகிய வெண்குணங்களுந் தன்றன்மையாகக் கொண்டு சிவனேயாய் நிற்பன், இதுவே சிவத்தைப் பெறுதலென்றும், இதற்கு மேலாய பலனொரு நூலானு மில்லை முக்காலுஞ் சத்தியமென வலியுறுத்தியும், ஆன்மா வெல்லாவற்றினு மதுவதுவாய் நிற்குமாற்றை யின்னும் விளங்கக்கூறுதுமென்றெடுத்துக்கொண்டு, பூதான்மா, அந்தரான்மா, தத்துவான்மா, சீவான்மா, மந்திரான்மா, பரமான்மா வென்ற றுவகைப்படுத்து, அவ்வவற்றிற் கூறிய வழி யவ்வப்பெற்றது வதுவாய் நிற்பனென வாண்டு நிற்குமாறு விரித்துணர்த்தியும், படிகத்தையுவமை கூறியும், இங்ஙனமேனை யாகமங்

கூறிய வழி யவ்வப்பெற்றது வதுவாய் நிற்பனென வாண்டு நிற்குமாறு விரித்துணர்த்தியும், படிகத்தையுவமை கூறியும், இங்ஙன மேனை யாகமங்கள் போலப்பொருள் கவர்ச்சிப்படுதற் கிடங்கொடாத வண்ணம் ஆறுமுகக்கடவுள் மாட்டுவைத்த கருணை மிகுதியான, அங்கை நெல்லிக்கனி போல வான்மாவினியல்பு விளங்கவுணர்த்திப் பலகாலும் வலியுறுத்தி யெல்லா வாகமங்களினுஞ் சிறந்ததென்பது தோன்றச் சர்வ ஞானோத்தர மெனப் பெயருமிட்டருளிச் செய்த ஸ்ரீ கண்ட ருத்திரக்கடவுளின் றிருவுளக் குறிப்பிங்ஙன மென்க.

இனியுடல் பொருளாவி மூன்று ஞானதீக்கையின் முதல்வனுக்கெனத் தானஞ்செய்தளித்தலான் முன் செயற்கையாற் றன்னுடைமையாய் நின்ற மூன்றுந் தானஞ்செய்த பின்னர்த் தனக்கின்றிச் சிவனுக்குடைமையாயவாறு பெற்றாம். பெறவே, ஆண்டுப்பொருளென்ற துடம்புபோல வொற்றுமை யுடைத்தாய்த் தன்னானுகரக்கிடந்த வுடல்வினையே யன்றி முன்பே தன்னாற் றுறக்கப்பட்டிழிந்த தரப்பொரு ளன்றென்பது தானே போதருதலானும், அவ்வாறின்றி யாண்டுப் பொருளென்ற தெல்லாவற்றிற்கும் பொதுவெனக் கொள்ளினும், உடல்வினையு மவற்றுளடங்குதலானும், அங்ஙன முதல்வனுக்கென்றீந்த வுடல் வினையை மீளவுந் தானுகரக் கருதுவோன் அவ்வாறு தானஞ்செய்தளித்த வான்மாவை மீளவுஞ் சுதந்திரனாகக் கருதுவோன் சிவசம வாதியோடொப்பவனா மாகலின் முதல்வனுக் கென்றளித்த பொருளைத் தானுகரக் கருதுதல் பெரியதோ ரிழுக்காதலறிக. இன்னுந் தன்னுடம்பே தனக்கின்றி முதல்வனுக் குடைமையாக வீந்த வழி யவ்வுடம்பிடமாக வரும் வினைப்பயனைத் தானுகருதற்கோரிபல் (யை ?) பின்மையு மறிக. இன்னுந் தனக்குத்தானே சுதந்திரமின்றிச் சிவனுக்குடைமையாய வழித் தான் மற்றொன்றுட னுகருமாறு யாண்டையதெனக. தன்னாலளிக்கப்பட்ட பொருள் மூன்று முதல்வனென்று கொண்டானென்பதனானன்றே (னென்பதன்றே-பாடம்) "என்றனாவியுமுடலுமுடைமை யெல்லாமுங் குன்றே யனையா யென்னை யாட்கொண்ட போதே கொண்டிலையோ" எனவும், "உடலிடங் கொண்டா யினி யுன்னை" எனவும் "என்றவனை" எனவும் "என்று கொண்டாயென்னை" எனவும் "நாமொழிந்து சிவமான"தெனவு மோதியவாறறிக.

அத்துவித வாக்கியத்தெளிவுரை

முற்றும்.

---

192-ஆம் பக்கத்தொடர்ச்சி

5-ஆம் அத்தியாயம் (ஸந்நியாச யோகம்.)

[இந்தச் சுலோகமுங்கூட 'ஸந்நியாஸ' சப்தார்த்தத்தை விவரிக்கின்றது. 'மனதினால் ஒழித்து' என்பதனால், அபிமானத்தியாகம் (அபிமானத்தை, பற்றைவிடுதல்) சொல்லப்படுகின்றது].

14. ஆத்மா கர்த்துருத்துவத்தைப் படைப்பதில்லை உலகத்தின் கர்மங்களைப் படைப்பதில்லை. கர்மப்பயன்களின் சம்பந்தத்தைப்படைப்பதில்லை (உண்டாக்குவதில்லை). ஸ்வபாவமே பிரவர்த்திக்கின்றது.

[கர்மங்கள்—உலகத்திற்கு வேண்டிய இரதம், பானை, வீடு, மேடை முதலியன. கர்மப்பயன்களின் சம்பந்தம்—மேற்சொல்லிய பதார்த்தங்களைச் செய்தவனுக்கு அவற்றின் பயன்களோடு சம்பந்தம். ஸ்வபாவம்—அவித்யாரூபமான பிரகிருதியென்னும் மாயை.]

[ஆத்மா (தேகத்திற்கு அதிபதி) வானது நம்மை வேலை செய்யத்தூண்டுவதில்லை. நாம் காரியங்கள் செய்வது ஆன்மாவின் பிரேரேபணையினாலன்று. ஆத்மா ஒரு காரியத்தைச் செய்விப்பது மில்லை, செய்வது மில்லை, அதற்கும் காரியங்களின் பயனுக்கும் சம்பந்தமுமில்லை. காரியங்களைச் செய்யும் நமக்கும் அந்தக் காரியங்களின் பயனுக்கும் சம்பந்தமுண்டாக்குவது ஆத்மாவன்று. ஆத்மா ஒன்றைச் செய்விப்பதுமில்லை, செய்வதுமில்லையெனின், மற்றுயார் எனின்,—காரியங்களைச்செய்வதும் செய்விப்பதும் ஸ்வபாவத்தின் வேலையாம். அந்த ஸ்வபாவத்திற்கு அவித்தையென்றும், பிரகிருதியென்றும், மாயையென்றும் பெயராம். 7-ஆம் அத். 14-ஆவது சுலோகத்தைப்பார்க்க.]

[தேவதைகள், பசுக்கள், பக்ஷிகள், ஸ்தாவரங்கள் முதலியவைகளே ஸ்வரூபமாயுள்ள பிரகிருதியுடன் கூடியிருக்கப்பட்ட இந்த உலகத்தில் அவ்வவற்றின் கர்த்துருத்துவத்தையும், கர்மங்களையும், அக்கர்மங்களினாலுண்டாகும் பயன்களுக்குச் சம்பந்தங்களையும், பிரபு, அஃதாவது, கர்மத்திற்கு வசப்படாமல் ஸ்வபாவமான ஸ்வரூபத்தோடு இருக்கப்பட்ட ஆத்மா, சிருஷ்டிப்பதில்லை. மற்று எப்படி எனின்—கர்த்துருத்துவம் முதலியவைகளெல்லாம், அநாதிகாலமாயுண்டாயிருக்கப்பட்ட பூர்வ பூர்வ கர்மங்களினால், தேவர் முதலிய ஸ்வரூபங்களாகிய பிரகிருதியின் ஸம்ஸர்க்கத்தினாற் (சம்பந்தத்தினாற்) செய்யப்பட்ட அந்தந்த ஆத்மாபிமானத்தினால் விளைந்த வாஸனைகளினாற் செய்யப்படுகின்றன. அவை ஆத்மஸ்வரூபத்தினாலுண்டானவை யல்லனவாம். ஸ்வபாம்—பிரகிருதி.]

[வஸ்துவின் ஸ்திதியைக்கொண்டு பார்த்தாற் கர்த்துருத்வம் இல்லையென்பது இந்தச் சுலோகத்தின் தாற்பரியமாம். ஜீவாத்மாவைப் பிரபுவென்பது ஜடங்களை யுத்தேசித்து.]

15. ஆத்மா எவருடைய பாபத்தையும் ஸ்வீகரிப்ப (மேற்கொள்வ) தில்லை. புண்யத்தையும் ஸ்வீகரிப்பதில்லை. ஞானம் அஜ்ஞானத்தினல் மூடப்பட்டிருக்கின்றது; அதனுற் பிராணிகள் மோகமடைகின்முர்கள்.

['எவருடைய உம்' : பக்தர்களுடையவும். ஆயின், என்ன உத்தேசத்துடன் பக்தர்கள் பூஜை, யோகம், தானம், ஹோமம் முதலிய நற்கர்மங்களைச் செய்கின்முர்களெனின், பகவான் சொல்லுகின்றுர்: விவேகமானது அஜ்ஞானத்தினுன் மூடப்பட்டிருக்கிறது; அதனுல் ஸம்ஸாரத்திலுழலுகின்றவர்கள் (அவிவேகிகள்) மோகித்து "நான் செய்கின்றேன்", "நான் செய்விக்கின்றேன்," "நான் அநுபவிக்கின்றேன்," "நான் அனுபவிக்கச் செய்கின்றேன்" என்பது முதலாய் நினைக்கின்முர்கள். இதனுற் பக்தர்கள் செய்யும் பூஜை முதலிய நற்கர்மங்களும் அஜ்ஞானத்தினுலேயே யென்று ஏற்படுகின்றது.]

[சுலோகத்தில் 'ஆத்மா' என்பதற்கு 'விபு' என்னும் பத முபயோகப் படுத்தப்பட்டிருக்கிறது. 'விபு' எங்கு மிருப்பவன். தேவதைகள் முதலிய சில தேகங்களில் மாத்திரமே ஆத்மா இருக்கிறதென்பதும் மாநுடர் முதலிய தேகங்களிலில்லை யென்பது மில்லை என்று தாற்பரியமாம்—எங்கும் நிறைந்திருக்கிறதென்பது பொருள். இந்த ஆத்மாவானது தனக்குச் சம்பந்தப்பட்டவர்களா யெண்ணப்படுகிறவர்களுடைய பாபத்தையும் போக்காது; தனக்கு விரோதிகளா யெண்ணப்படுபவர்களுடைய புண்யத்தையும் போக்காது. ஆகையால், ஆத்மா ஒருவனுக்குச் சம்பந்தியும் மற்ருெருவனுக்கு விரோதியு மாதலில்லை.

['அஜ்ஞானம்'=ஞானத்திற்கு விரோதியாகிய பூர்வ பூர்வ கர்மம். இதனுல் இந்த ஆத்மாவின் ஞானம் ஸங்கோசிக்க (குறுக்க)ப்பட்டது. இந்தக் கர்மத்தினுலேயே தேவர் முதலானேருடைய தேக சம்பந்தமும், தேவர் முதலானேருடைய தேகங்களில் ஆத்மாபிமானமென்னும் மோஹமு முண்டாகின்றன. அதனுல், அப்படிப்பட்ட ஆத்மாபிமான வாஸனையும் அதற்குத் தகுந்த கர்ம வாஸனையு முண்டாகின்றன. வாஸனையினுல் விபரீதமான ஆத்மாபிமானமும் கர்மாரம்பமும் ஏற்படுகின்றன.]

16. எந்த ஆன்மாக்களின் அஜ்ஞானமானது ஆத்மாவினுடைய ஞானத்தினுல் நாசஞ்செய்யப்பட்டுளதோ, அவர்களுடைய ஞானமானது அந்தப் பர தத்துவத்தைச் சூரின்போலப் பிரகாசிக்கச் செய்யும்.

[ஞானம்=ஆத்ம விஷயமான விவேகஞானம். சூழ்ந்து மூடிக்கொண்டிருப்பதனுல் மோகத்தை யுண்டாக்குகின்ற எவருடைய அஜ்ஞானமானது ஆத்ம விஷயமான விவேக ஞானத்தினுல் நசிக்கச் செய்யப்பட்டதோ, அவ

ருடைய ஞானம், சூரியனைப்போல், எல்லா வஸ்துக்களையும் பிரகாசிக்கச் செய்கின்றது. அதுவே பரமார்த்த தத்துவமாம்.]

[எந்த ஆத்மாக்களின் ஆத்மஞானத்தினற் கர்ம ஸஞ்சய ரூபமான அஜ்ஞானம் நசிக்கச் செய்யப்பட்டதோ, அவர்களுடைய இயல்பான, சிரேஷ்டமான, அந்த ஞானமானது ஸங்கோசமில்லாததாய், எல்லாவற்றையும் பிரகாசிக்கச் செய்யும்.]

[ஈசுவரனை நேராய்த்தெரிந்து கொள்வதே—ஈசுவர விஷயமான பிரத்தியக்ஷ ஞானமே—அஜ்ஞானத்தைப் போக்குகின்றது.]

17. அதனிடத்துப் புத்தியுள்ளவர்களும், அதுவே ஆத்மாவென்று எண்ணுகிறவர்களும், அதனிடத்தே அபிநிவேசமுள்ளவர்களும் (அதனிடத்தே மனதைச் சலனமில்லாமல் வைத்திருப்பவர்களும்), அதுவே பரமகதியென்றிருப்பவர்களும், ஞானத்தினற் பாபங்களைப் போக்கிக்கொண்டவர்களும் மறுபடி பிறவாமையை யடைகின்றார்கள்.

['அது'=பிரம்மம். இந்த லக்ஷணங்களுள்ள ஸந்நியாசிகள் மறுபடியும் தேக சம்பந்தமடையார்; ஜன்மமெடார்; மோக்ஷமடைவார்.]

['அது'—ஆத்மா. அந்த ஆத்ம விஷயமான மனதுள்ளவரும், அந்த அப்பியாசத்திலாசையுள்ளவரும், அதுவே முக்கியமான பிரயோஜனமென்றெண்ணுவோரும்; எந்த அவஸ்தையிலுள்ள ஆத்மாவுக்குப் புனராவிருத்தி (மறுபடி வருதல், மறு பிறப்பு) இல்லையோ, அந்த ஆத்மாவை யடைவார்கள். மேற்கூறிய லக்ஷணங்களுள்ளவர்கள் ஸ்வஸ்வரூபத்தோடுகூடிய (தன்னுடைய உண்மையான ஸ்வரூபத்திலிருக்கிற) ஆத்மாவை யடைவார்கள்.]

ஞானத்தினல் ஆத்மவிஷயமான அஜ்ஞானத்தைப்போக்கிக்கொண்டவர்கள் தத்துவத்தை (உண்மையை) எப்படிப் பார்க்கின்றார்கள்?—கேள்:

18. வித்தையுடனும் விநயத்துடனும் கூடிய பிராமணனிடத்தும், பசுவினிடத்தும், யானையினிடத்தும், நாயினிடத்தும், நாயைப் புசிப்பவனிடத்தும் (சண்டாளனிடத்தும்) ஞானிகள் சமபுத்தியுள்ளவர்களாயிருப்பார்கள்.

['விநயம்'—உபசமம், சாந்தம்; உத்தம ஸம்ஸ்காரங்களினல் வரும் தன்மை. இங்கே சொல்லப்பட்ட பிராணிகளில், மிகவும் உத்கிருஷ்டமாய்ப் பிராமணனைச் சொன்னர்; அவன் உத்தம ஸம்ஸ்காரங்களினல் ஆத்ம தத்துவ பராயணனனவன், மிகுந்த ஸாத்விக குண முள்ளவன். அந்த அந்தஸ்துக்குக் கீழ்ப்பட்டதாய்ப் பசு சொல்லப்பட்டது. அது ஸம்ஸ்காரங்களில்லாதது, மத்தியமமானது, ராஜஸகுண முள்ளது. கேவல தாமஸகுண மதிக

மாயுள்ள, ஸம்ஸ்காரங்களில்லாத, அதமமான யானை முதலியவை கடைசியாய்ச் சொல்லப்பட்டன. இவை யெல்லாவற்றிலும், புத்திசாலிகள் (பண்டிதர்கள்) ஒன்றையே, ஒ ராத்ம தத்துவத்தையே காண்பார்கள்; அந்த ஆத்ம தத்துவமானது ஸாத்விக ஸம்ஸ்காராதிகளின் ஸம்பர்க்கமில்லாததாயும் (முக்குணங்களுக்குச் சம்பந்தப்படாததாயும்) விகாரமில்லாததாயுமிருக்கின்றது.]

[பிராமணன், பசு, யானை முதலிய விஷமாகாரங்கள் (உருவவித்தியாசங்கள்) பிரகிருதியைச்சேர்ந்தவைகளேயன்றி, ஆத்மாவைச் சேர்ந்தவை யல்ல. ஆத்மாவானது, ஞானஸ்வரூபமானதால் (ஞானமாகிய ஒரே உருவமுள்ளதாதலால்) எல்லாவிடத்தும் சமமேயாம் என்று ஆத்ம ஞானிகள் நினைப்பார்கள்.]

[பரமேசுவரனுடைய ஸ்வரூபங்களெல்லாவற்றையும் எல்லாவிடத்தும் சமமாய்ப் பார்ப்பது அபரோக்ஷ (நேரான) ஞானத்திற்குச் சாதனமென்று இந்தச் சுலோகம் தெரிவிக்கின்றது].

ஆக்ஷேபனை.—நீர் சொல்லிய பண்டிதர்கள் பாபிகளாவர். அவருடைய அன்னத்தைப் புசிக்கக்கூடாது. ஏனெனின், விதி இவ்வாறிருக்கின்றது :

நஸ்வபோஜ்யாந்நாஸ்தே தோஷவந்த:

ஸமாஸமாப்யாம் விஷமஸமே பூஜாத—(கௌதமஸ்மிருதி, 17,,20).

"சமானமானவர்களை வேறுவிதமாகவும், சமானமில்லாது, தாழ்மையானவர்களைத் தனக்குச் சமமாகவும் பூஜிக்கப்பட்ட, மரியாதை செய்யப்பட்ட இடத்தில் அன்னமுண்ணலாகாது."

சமாதானம்.—அவர்கள் பாபிகளாகார்கள். எங்ஙனமெனின்,—

19. யாருடைய மனது, எல்லாவற்றினிடத்தும், சம திருஷ்டியடைந்திருக்கிறதோ, அவர்களால் இவ்வுலகத்திலேயே, பிறவி (த்துன்பம்) ஜயிக்கப்படுகின்றது. பிரம்மமானது தோஷமில்லாததும், சமமானதுமன்றோ? ஆகையால் அவர்கள் பிரம்மத்தினிடத்தே உள்ளவர்களாவர்.

[பிரம்மமொன்றையே பார்ப்பவர்களாயும், எல்லாப்பூதங்களிலும் பிரம்மம் சமமாகவே இருக்கின்றதென்னும் நினைவு கொஞ்சங்கூடச் சலியாத மனத்தை (அந்தக்கரணத்தை) யுடையவர்களாயும் இருக்கிற ஞானிகள் பூமியின்மீது உயிர்த்திருக்கும்பொழுதே பிறவித் துன்பத்தை ஜயிக்கின்றார்கள். நாய் தின்னும் புலையர்கள் முதலானோருடைய அசுத்தமான சரீரங்களிற் பிரம்மமானது அவர்களது அசுத்தத்தினால் தோஷப்பட்டதுபோல் மூடர்களுக்குத் தோற்றியபோதிலும், பிரம்மமானது குணபேதங்களினால் உண்டாகும் பேதங்களில்லாததாய்த் தோஷமற்றதாய்ச் சுத்தமாயிருக்கின்

றது. பிரம்மம் நிர்க்குணமாதலின் அதற்கு ஸ்வகுணபேத (சொந்தமாகிய குணத்திற் பேத) மில்லை. ஆசை (காமம்) முதலானவைகள் தேகமாகிய க்ஷேத்திரத்தின் குணங்களேயன்றி ஆத்மா (சைதன்யம்) வினுடையன வல்லவென்று 13 ஆவது அச். 6-ஆவது சுலோகத்திலும், ஆத்மாவானது ஆதியில்லாதது (பிறப்பில்லாதது), அதற்குக் குணங்களில்லை யென்று 13 ஆவது அச். 31-ஆவது சுலோகத்திலும் பகவான் சொல்லுகின்றார். ஆத்மாவினிடத்துப் பேதங்களைக் காட்டுவதற்குக் கடைசிக் குறிகளெனப்பட்ட அந்த்ய விசேஷங்களுமில்லை. ஏனெனின், ஒவ்வொரு சரீரத்திலும் அவையிருக்கின்றன வென்பதற்கு நிதர்சனமில்லை. ஆகையாற் பிரம்மம் சமமாகவும் ஒன்றாகவுமே யிருக்கின்றது. இந்தக் காரணங்களினால் ஞானிகள் (பண்டிதர்கள்) பிரம்மத்தினிடத்தே இருக்கின்றார்கள்.

வைசேஷிக மதப்பிரகாரம் அந்த்ய விசேஷ மென்பது ஒரு நித்தியவஸ்துவினிடத்து, அதனை மற்றொரு நித்திய வஸ்துவினின்று பகுத்துக்காட்டுவதற்காக, இருக்கப்பட்ட ஒருவிதமான லக்ஷணமாம்; அந்த லக்ஷணம் இத்தன்மையதென்று எடுத்துச் சொல்ல முடியாததாம். வேறுவேறாய் ஒவ்வொரு நித்திய வஸ்துவுக்கும் அதனைக் குறித்துக் காட்டுவதற்காக அமைந்திருக்கும் லக்ஷணமாம். வேறுவிதங்களால் தெரிந்திருக்கப்பட்ட ஒருவித்தியாசத்திற்குக் காரணம் காட்டும் நிமித்தமாக இந்த 'அந்த்ய விசேஷ'மென்னும் லக்ஷணம் ஊகிக்கப்படுகின்றது. நித்திய வஸ்துக்களாவன:—பிருதிவி (மண்), அப்பு (ஜலம்), தேயு (சோதி), வாயு, ஆகாசம் (ஈதர் Ether), காலம், தேசம் (Space), ஆத்மா, மனம் ஆகிய இவைகளினுடைய அணுக்களாம். ஆத்மாவினிடத்து அந்த்ய விசேஷங்கள், அது வித்தியாசமாய்க் காணப்படுவதனால், ஊகிக்கப்படுகின்றது. இதை வேதாந்திகள் ஸ்தாபிதம் ஆனதாக ஒப்புக்கொள்ளார். சரீரவித்தியாசத்தினால் ஆத்மாவில் வித்தியாசமிருக்கிறதென்று சொல்லக்கூடாது; ஏனெனின், ஒரு யோகியானவன் ஒரே காலத்திற் பலசரீரங்களைத் தரிக்கவல்லவனா யிருக்கின்றான்.

தேகம் முதலானவைகளின் தொகுதியே ஆத்மாவென்னும் அபிமானமும், அதுவே "நான்" என்னும் அகங்காரமும் ஞானிகளுக் கில்லாததனால் அவர்களுக்குச் சரீரங்களின் தோஷங்கள் கொஞ்சங் கூடச்சம்மந்தப்படாத தோஷவாசனையும் அவர்களை யணுகாது. மேலேயுதாகரிக்கப்பட்ட கௌதம சூத்திரமானது, சரீரம் முதலியவற்றின் தொகுதியே ஆத்மாவென்று அபிமானங்கொண்டு அகங்கார மடைந்திருப்பவர்களுக்கு மாத்திரமே உரித்தாகும்; ஏனெனின, அது பூஜிப்பவர்களையும் பூஜிக்கப்படுபவர்களையுங் குறிக்கின்றது. பூஜிப்பதிலும், தானம் கொடுப்பதிலும், சில குணவிசேஷங்கள் கவனிக்கப்படுகின்றன; பிரம்மஞான முள்ளவர்களுக்கும், ஷடங்கங்களெனப்படும் ஆறுசாஸ்திரங்களிற் தேர்ந்தவர்களுக்கும், நான்கு வேதங்

களிற் சமர்த்தர்களுக்கும், இன்னும் இவைபோன்ற போக்கிதை யுள்ளவர்களுக்கும் அவர்களுடைய குணவிசேஷங்களுக்காகப் பூஜை செய்யப்படுகின்றது, தானம் கொடுக்கப் படுகின்றது. ஆனல், பிரம்மமோவெனின், அது சர்வ குணதோஷசம்பந்த மில்லாததா யிருக்கின்றது ; நற்குணமுமில்லை, தோஷமுமில்லை, ஆகையால் ஞானிகள் 'பிரம்மத்தினிடத்து இருக்கிருர்கள்' என்று சொல்லப்பட்டது. இஃதன்றியும், மேலே ஆக்ஷேபணைக்கு ஆதாரமாகக் காட்டப்பட்ட கௌதம சூத்திரம் கர்மவிஷயமானது ; இங்கு நாம் 13 - ஆவது சுலோகம் முதல் (இந்த அத்தியாயத்தின் கடைவரைக்கும்) பிரஸ்தாபிப்பது ஸர்வகர்மஸந்நியாஸயோக விஷயமாகும்.]

['இவ்வுலகத்திலேயே': சாதனத்தை யாசரிக்கும் தசை (ஸ்திதி) யிலேயே. 'பிறவி': ஸம்ஸாரம். பிரகிருதியின் சம்பந்தமென்னும் தோஷமில்லாமற் போவதனுற் சமமாயிருக்கும் ஆத்மவஸ்துவன்றே பிரம்மமாகும் ? ஆத்மசமத்துவத்திலிருப்ப வர்களானல், பிரம்மத்தினிடத் திருப்பவர்களேயாவர். பிரம்மத்தினிடத் திருப்பதன்றே ஸம்ஸார ஜயமாகும்? ஆன்மாக்கள் ஞானைகஸ்வரூபிகள் (அவை ஞானஸ்வரூபிகள், ஒரேஸ்வரூப முள்ளவைகள்) என்னும் சமத்துவத்தையே நினைத்துக் கொண்டிருப்பவர்கள் முக்தர்களே என்று அர்த்தமாம்].

[இதற்குக் கீழ்ச் சுலோகத்திற் சொல்லிய சமத்துவத்தையே இந்தச் சுலோகம் துதிக்கின்றது].

ஆத்மாவாகியபிரம்மமானது தோஷங்களில்லாததாயும் சமமாயுமிருக்கின்றது. ஆகையால்,

20. நிலையான புத்தியுள்ளவனும், மோக மில்லாதவனும், பிரம்மஞான முள்ளவனும், பிரம்மத்தினிடத்தே இருப்பவனும் (பிரம்மமா யிருப்பவனும்) இஷ்டமானதை யடைந்து சந்தோஷிக்கக்கூடாது. இஷ்டமில்லாததை யடைவதனுற் பயப்படவுங் கூடாது.

['நிலையான புத்தியுள்ளவன்': எல்லாப் பிராணிகளிலுமுள்ள ஆத்மா ஒருவனே; அவன் சமமானவன், தோஷமில்லாதவன் என்னும் நிச்சயமுள்ளவன். 'பிரம்மத்தினிடத்திருப்பவன்': கர்மங்களைச் செய்யாதவன்; எல்லாக் கர்மங்களையுஞ் சந்நியசித்த (விட்ட) வன்.

தேகமே ஆத்மா வென்று நம்பிக்கொண்டிருக்கிறவர்களுக்குப் பிரியமும் அப்பிரியமும் சந்தோஷத்தையுந் துக்கத்தையுமுண்டாக்கக்கூடும். கேவலம் ஆத்மாவையே பார்க்கிறவனுக்கு அப்படிப்பட்ட சந்தோஷமுந் துக்கமுமுண்டாகமாட்டா ; ஏனெனின், ஆத்மாவுக்கு ஒருபொழுதும் பிரியமுமில்லை, அப்பிரியமுமில்லை].

[ஆத்மாவினிடத்து ஸ்திரமான புத்தியுள்ளவன் 'நிலையான புத்தியுள்ளவ' னாவன். 'மோகம்=நிலையில்லாத சரீரத்தையும் நிலையான ஆத்மாவையுமொன்றெனப்பாவிப்பது. அஃதில்லாதவன் 'மோகமில்லாதவன்.'"பிரம்மஞான முள்ளவன்'—'பிரம்ம வித்'=ஆத்மாவின் உண்மையை யறிந்தவன். 'பிரம்மத்தினிடத்தே யிருப்பவன'=அந்தஞானத்தையே (பிரம்மத்தின் உண்மையான ஞானத்தையே) அப்பியாசஞ் செய்து கொண்டிருப்பவன். ஒவ்வொரு சரீரத்திலிருக்கும்பொழுது பழைய கர்மவாசனையை யநுசரித்துச் சில விஷயங்கள் பிரியமாயும், சில பிரயமில்லாமலு மிருக்கும். ஸ்திரமில்லாத இந்த இஷ்டாநிஷ்டங்களை யடைந்து சந்தோஷத்தையாவது பயத்தையாவது கொள்ளக்கூடாது.]

[இந்த அத்தியாயத்தில் இனிவரும் சுலோகங்களினால் ஸந்நியாஸம், யோகம், ஞானம் என்கிற மூன்றும் மொத்தமாக விவரிக்கப்படுகின்றன].

அன்றியும், பிரம்மத்தினிடத் திருந்துகொண்டு,

21. வெளி விஷயங்களிற் பற்றில்லாத அந்தஃகரணமுள்ளவனாகி அவன் ஆத்மாவினிடத்து எந்தச்சுகமுண்டோ அந்தச்சுகத்தை யடைகின்றான்; பிரம்மத்தினிடத்துச் சமாதியுடன் கூடிய அந்தஃகரண முள்ளவனாகி, அவன் ஒருபொழுதுங் குன்றாத சுகத்தை யடைகின்றான்.

[ஆத்மாவினிடத்துக் குறைவில்லாச் சுகத்தையடைய விரும்புகிறவன் க்ஷணகாலமாத்திரமாயிருக்கிற வெளிவிஷய சுகங்களினின்று இந்திரியங்களைத் திருப்பி உள்ளிழுக்கவேண்டும்].

['வெளிவிஷயங்களிற் பற்று'=ஆத்மாவைவிட வேறான விஷயங்களின் அநுபவம். எவன் வெளிவிஷயாநுபவங்களில் ஸங்கமில்லாத மனமுள்ளவனாகி, ஆத்மாவினிடத்தே சுகத்தை யடைகின்றானோ அவன் பிரகிருதி யப்பியாசத்தைவிட்டுப் பிரம்மாப்பியாசத்துடன் கூடிய மனமுள்ளவனாகிப் பிரம்மாநுபவ ரூபமான அக்ஷய (குறைவில்லாத) சுகத்தையடைகின்றான்].

[இச்சுலோகத்தினால் யோகத்தின் ஆதிக்யம் (விசேஷத்துவம்) வெளியிடப்படுகின்றது. காமம் (விருப்பம்) இல்லாத ஆத்மாவினிடத்து எவன் சுகத்தை யடைகின்றானோ, அவனே பிரம்மத்தைக்குறித்த யோகத்துடன் (தியான முதலியவைகளுடன்) கூடிய ஆத்மாவுள்ளவனாகி அந்த அக்ஷய சுகத்தையடைகின்றான். தியானம் முதலானவைகளுடன் கூடியவனுக்கே குறைவில்லாத ஆத்ம சுகமுண்டாகும்; வேறெவ்விதத்திலு முண்டாகாது.]

இன்னு மிந்தக்காரணத்தினலும் அவன் இந்திரியங்களை வெளி விஷயங்களினின்று நிவர்த்திக்கவேண்டும்.

22. விஷயங்களும் இந்திரியங்களும் சம்பந்தப்படுவதனலுண்டாகிற அநுபவங்கள் எவையோ அவை துக்கத்திற்குக் காரணங்களேயன்ரே? அவை முதலுங் கடையு முள்ளவை. (சொற்ப கால மிருப்பவைகளாம்). ஓ குந்தி புத்திரா (அர்ச்சுன)! ஞான முள்ளவன் அவைகளிற் பிரீதி செய்யான்.

[இந்திரியங்களும் இந்திரிய விஷயங்களும் சம்பந்தப்படுவதனலுண்டாகும் போகங்கள் துக்க காரணங்களேயாம்; ஏனெனின், அந்தப்போகங்கள் அவித்தையினலுண்டாயின. நமக்குச் சம்பவிக்கிற எல்லாத் துக்கங்களும் அந்தப்போகங்களினின்றே விளையவில்லை யென்றுங் காண்கிரும். இவ்வுலகத்தி லெப்படியோ அப்படியே பரலோகத்திலும் 'காரணங்களே' என்பதிலுள்ள ஏகாரத்தினலறிக. சமுசாரத்திற் சுகமென்பதன் வாசனை மாத்திரம் கூட இல்லை யென்று தெரிந்து கொண்டு, ஒருவன் இந்திரிய விஷயங்களென்னுங் கானவினின்று இந்திரியங்களை நிவர்த்திக்கவேண்டும். அந்தப்போகங்கள் துக்க முண்டாக்குவதே யன்றி, அவைகளுக் கொருமுதலும் (ஆதியும்) கடையும் (முடிவும்) இருக்கின்றன. ஓரிந்திரியமானது தனது விஷயத்துடன் சம்பந்தப்படுவது (ஸம்யோகப்படுவது) அந்தப்போகத்திற்கு ஆதியாகும், இந்திரியம் விஷயத்தினின்று பிரிவது (வியோகப்படுவது) அதற்கு முடிவாகும். போகங்கள் அவற்றின் ஆதிக்கும் அந்தத்திற்கு மிடையிலுள்ள நிமிஷ மாத்திரத்திலுண்டாகிற அநித்தியமானவைகள். பரமார்த்த தத்துவத்தை யறிந்த விவேகியானவன் இவைகளிற் சந்தோஷமடையான். பசு முதலானவைகளின் மிருகத்தன்மையையுடைய முழுமூடர்கள் மாத்திரமே இந்திரிய விஷயங்களில் ஆனந்திப்பார்கள்].

அன்றியும், சிரேயோமார்க்கத்திற்கு (நற்கதிக்கு) த்தடையாகிக் குறுக்கே நிற்கின்ற சத்துருவான தோஷமொன்றுளது; அது தீத்தன்மையது; அதனுடன் போராடுவது வெகு கஷ்டம்; எல்லா அநர்த்தங்களும் அதனலேயே உண்டாகின்றன; அதனை ஒதுக்கித் தள்ளுவது வெகு பிரயாசையான காரியம்; அந்தச் சத்துருவைத் துரத்தியடிக்கும் பொருட்டுப் பலமான பிரயத்னம் பண்ணவேண்டுமென்று பகவான் சொல்லுகின்ருர்.

23. எவன் இங்கேயே, சரீரத்தை விடுவதற்கு முன்னரே, காமத்தினலும் குரோதத்திலும் உண்டாகிற வேகத்தை (ஆகவேசத்தை)ச்சகித்துக் கொள்ளச்சமர்த்தனகின்ருனே, அந்த மனிதன் யோகமுள்ளவன்; அவன் சுகமுள்ளவன்.

(இன்னும் வரும்.)

தி. அ. ஸ்வாமிநாத ஐயர்.

## ஆர்க்கிமதேயர் கண்டவிதி.

ஆர்க்கிமதேயர் என்பவர் ஒரு மேற்புலவிஞ்ஞானி. பொருளின் இயல்களை யறிய முயன்றவர்களில் இவர் ஒருவர், இவர் கண்டுபிடித்த உண்மை இவர் பெயராலேயே 'ஆர்க்கிமதேயர் கண்டவிதி' என்று வழங்கி வருகிறது.

திரவ பதார்த்தத்திற் போடப்பட்ட ஒவ்வொரு வஸ்துவும் மேலே எழுப்பப்படுகிறது. உதாரணமாகத் தண்ணீரில் நெட்டியைப் போட்டால் அது மேலே எழும்புகிறது. ஒரு மரத்துண்டைப் போட்டாலும் அதுவும் உடனே எழும்புகிறது. தண்ணீர் அவ்விடத்தில் இல்லாவிட்டால் அந்நெட்டியும் மரத்துண்டும் கீழே விழுந்துவிடுமென்பதிற் சந்தேகமில்லை. அவற்றை விழாதவண்ணம் எழுப்புவதெது? தண்ணீரே. இதனால் தண்ணீர்க்குமேலெழுப்புஞ் சக்தியுண்டென்றறிகிறோம். ஆனால் அத்தண்ணீரில் இருப்புத்துண்டு முதலிய பளுவான வஸ்துக்களை இட்டால் மேலெழும்புவதில்லையே; ஆண்டு அத்தண்ணீர்க்கு மேலெழுப்புஞ் சக்தி இல்லையோ என்று சந்தேகிக்கலாம். இதனைத் தெளிந்தறியும்பொருட்டு ஒரு சோதனை செய்யலாம்.

ஒரு தராசை யெடுத்து அதன் ஒரு தட்டின் கீழாக ஒரு கயிறு கட்டி அதில் ஓர் இருப்புத்துண்டைக் கட்டுங்கள். மற்றொரு தட்டில் எடை சரிவரு மட்டும் மணலையாவது சிறு கற்களையாவது போடுங்கள். பின்பு ஒரு செம்பிற் சலம் கொண்டுவந்து இருப்புத்துண்டு மாத்திரம் தண்ணீரில் அமிழும்படி வையுங்கள். அப்போது மணலுள்ளது வலிதாகத் தாழ்தலைக் காண்பீர்கள். மீண்டும் தராசு முன்னைய நிலைக்குவர மணலினின்றும் சிறிது எடுத்துவிடவேண்டியதாயிருக்கும். அதாவது, இருப்புத்துண்டு தன் எடையிற் சிறிது குறைந்துவிட்டது. தண்ணீரிலிருக்கும்போது மாத்திரம் சிறிது எடை குறையக் காரணமென்ன? நெட்டி முதலியவற்றை மிதப்பித்த தண்ணீர்க்குள்ள மேலெழுப்புஞ் சக்தி இவ்விடத்தும் இருப்புத்துண்டை மேலெழுப்ப முயலுதலேதான் காரணம். ஆதலின் இத்தன்மையாகிய மேலெழுப்பும் சக்தி தண்ணீர்க்கெப்பொழுதுமுண்டு. இச்சக்தியால் தண்ணீரிலிட்ட வஸ்துக்கள் எடை குறைவதுபோல் தோன்றும்.

தண்ணீரிலிட்ட வஸ்துக்கள் வாஸ்தவமாகவே எடை குறைகிறதா என்று தெளிய—தராசின் ஒரு தட்டில் இருப்புத்துண்டையும் சலமுள்ள ஒரு செம்பையும் வைத்து எடை சரிவருமட்டும் மற்றொரு தட்டில் மணலையிடுங்கள். பிறகு இருப்புத்துண்டை யெடுத்துச் செம்பிற்குள்ளிருக்கும் சலத்திற்போடுங்கள். இப்பொழுதும் தராசின் முள்முன்போலவே நேராய் நிற்பதைக்காண்பீர்கள். இதனால் இருப்புத்துண்டு தண்ணீரிலிருக்கும்

* Principle of Archimedes.

போது வாஸ்தவத்தில் எடை குறைவதில்லை என்றும் ஆனால் தண்ணீரில் அந்தரமாய்த் தொங்கவிடும்போது சிறிது எடை குறைவதுபோல் தோன்றுமென்றும் அறிந்துகொள்ளலாம்.

ஆயின் தண்ணீரில் இட்ட வஸ்துக்கள் தம்மெடையில் எவ்வளவு குறையுமென்பது தெளிய வேறொரு சோதனை செய்யவேண்டும்.

முன்னெடுத்த தராசையே எடுத்துக்கொண்டு அதனடியில் ஓர் ஆழாக்கைக் கயிற்றால் கட்டித்தொங்கவிடுங்கள். வேறோர் ஆழாக்கை யெடுத்து அது நிறைய மணலையாவது சிறு கற்களையாவது போட்டு உள்ளே நீர்புகாதபடி ஒரு மூடியுமிட்டு முன் தொங்கவிட்ட ஆழாக்கின் கீழ் இதனையும் வேறொரு கயிற்றால் தொங்கவிடுங்கள். (ஆழாக்கினளவு உட்புறம் வெற்றிடமில்லாமல் முழுவது மிரும்பாக இருப்பதொன்று பெறக்கூடுமானால் இன்னும் உத்தமம்). பிறகு எடை சரிவருமட்டும் மற்றொரு தட்டில் மணலையாவது சிறு கற்களையாவது போடுங்கள். பிறகு அகன்ற ஒரு பாத்திரம் கொண்டுவந்து மணலுள்ள ஆழாக்கு தண்ணீரில் அமிழும் வரைக்கும் அப்பாத்திரத்தில் தண்ணீர் விடுங்கள். அப்பொழுது அவ்வாழாக்கு முன்சொல்லியவண்ணம் எடை குறைந்து மற்றொரு தட்டுத்தாழ்வதைக்கவனிப்பீர்கள். எவ்வளவு எடை குறைகிறதென்பதைக்கண்டு பிடிக்க மேலுள்ள வெறும் ஆழாக்கினிறையச் சலம் விடுங்கள்; உடனே தராசின் முள் நேராக நிற்பதைக் காண்பீர்கள். இதனால் கீழுள்ள ஆழாக்கு தண்ணீரில் அமிழும் போது ஆழாக்குச் சலத்தின் எடை குறைகிறதென்பது தெளிவாய் விளங்குகிறது. இதுபோலவே '**எத்தன்மையான வஸ்துவும் தண்ணீரில் அமிழும்போது தன்னளவு தண்ணீரின் எடை குறைகிறது**'. இச்சூக்குமத்தைத் தான் ஆர்க்கிமதேயர் கண்டு பிடித்தார். ஆதலின் இதற்கு '**ஆர்க்கிமதேயர் கண்டவிதி**' என்று சொல்லப்பட்டு வருகிறது.

வஸ்துக்கள் தண்ணீர்க்குள் தம்மளவு தண்ணீரின் எடை குறைவதற்குக் காரணம் முன் சொன்னபடி அவ்வெடையளவு வலியோடும் தண்ணீர் அவ்வஸ்துக்களை மேலெழுப்புஞ் சக்தியேயாம்.

மேல் விளக்கியவற்றால் சில வஸ்துக்கள் தண்ணீரில் அமிழ்வதேன் சில மிதப்பதேன் என்பது எளிதில் அறியக்கூடியதாயிருக்கிறது. தண்ணீரில் அமிழ்ந்த வஸ்துக்கள் தம்மளவு நீரின் எடை வலியோடு அத்தண்ணீரால் மேலெழுப்பப்படும் என்று முன் சொன்னோமல்லவா? அவ்வாறு மேலெழுப்பும் வலியானது வஸ்துக்களின் வாஸ்தவ எடைக்கு மிஞ்சுமாயின் அவ்வஸ்துக்கள் மேலெழுப்பப்பட்டு மிதக்கும்; அவ்வாறன்றிக் குறையுமாயின் அவை தண்ணீருள்ளும் கீழ் நோக்கிவிழும். வஸ்துவின் எடையும் அதனை மேலெழுப்பும் திரவத்தின் வலியும் சமானமாதலரிது; அரிதெனினும் உண்டாயின் அது மிதத்தல் அமிழ்தல் இரண்டுமின்றி இட்டவிடத்தில் இருக்குமென்றறிக.

சி. சுப்பிரமணியாசாரி, பி. ஏ., எல். டி.

# மகாராணியவர்கள்மீது இரங்கற்பா.

---

## அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

சூல்தாங்கு முகிலென்னச் சுடர்தாங்கு மிரவியெனச் சுவறா தென்றும்
பால்தாங்கும் வேலையெனப் பயன்றாங்கோ ளாதருளிற் பரிந்து நீள்செங்
கோல்தாங்கிக் குடிதாங்கிக் குணந்தாங்கிக் குறைதாங்கிக் கொற்றந் தாங்கி
மால்தாங்கு முலகமெலாம் புரந்தபெரு மாட்டியுமே மரித்தா ளென்னே !

நீதியிருந்தென் படையிருந்தென் நிலமிருந்தென் நீரிருந்தென் நிகரி லாத
பதியிருந்தென்பற்றுடைய பலரிருந்தென் பலமிருந்தென் பரந்த கேள்வி[னா
மதியிருந்தென்நட்பிருந்தென்மகவிருந்தென்மற்றிருந்தென்மறுத்தற்கொண்
விதியிருந்த படியன்றோ வேந்தர்சிகா மணியுமிறந் தடைந்தாள் விண்ணில்.

சேணரச ருளம்வியந்து சிரந்துளக்கப் பெரும்புவியிற் றிறலின் மிக்க
ஆணரச ரடிவணங்க முடிபுனைந்த பெண்ணரசி யணங்கே நின்போற்
பேணரச ரினிச்செங்கோல் பெற்றரசு புரிந்திடினும் பெறுதற் கொண்ணா
மாணரசி நின்குணங்கள் மறப்பவரு முண்டுகொலோ மாந்தர் தம்முள்.

பெண்பாலா ரெல்லாரும் பெருமையிழந் தாவலிப்பப் பெரியோர் மற்றோர்
கண்பாலா றாயொழுக்கிக் களியிழப்பக் கலியையா யிரத்தீ ராண்டி
னெண்பாலா மகரமதி யிசைந்தவொரு பான்றெய்தி யிழந்தோ முன்னை
விண்பாலா ரமரரிறை விருந்தேற்பப் பெருந்தவங்கள் விளைத்த தாலே.

தொழுந்தகையமுடிவேந்தர்பற்பலர்கள்தோள்புணர்ந்து துறையொன்றின்றி
செழுந்தகையகற்பிழந்தாயெனும்அலரைச்செவிக்கொளவுமிசையாதுள்ளத்[ச்
தழுந்தியநற் கருணையினா லவ்வசைகொன் றனையாண்ட வரசி வாழ்வை
இழந்தனையோ புவிமடந்தா யிழந்தனையோ எளியநிலை யெய்தினாயோ ?

வற்புடைய பலமதத்து வாதியர்க்குந் தாயகமாய் வழங்கு மிந்தப்
பொற்புடையிந்தியதேசம்பொதுத்தாயென்றொருமனதாய்ப்போற்றுமாறன்
அற்புடைமை தனைக்காட்டி யாண்டவொரு பெருமதியி னருமை நோக்கிற்
கற்புடைய கவின்விளக்கே நினக்கிணையார் மன்னர்தமுட் கருதுங் காலே.()

மெய்சுமந்த வுயிர்களெலா மிடிசுமந்த விளைமையென மிகவு மேங்கிக்
கைசுமந்த தலையினராய்க் கரைந்துருக வொருசேடன் கணக்கி லாத
பைசுமந்த வகன்புவியைப் பசியவிரு தோள்சுமந்து பரித்த நீயும்
பொய்சுமந்த வாழ்க்கையினை யகன்றாவி போயினையோ புவனி மீதே. (எ)

## தரவு கொச்சகக் கலிப்பா.

நீராழி யில்லா நெடுவிசும்பிற் சென்றுலவு
மோராழி யோனு முளநாணி* மெய்சுருங்கப்
பேராழி சூழும் பெரும்புடவி யெங்கெங்குஞ்
சீராழி பொன்றே செலுத்தியது பொய்யாமோ? (அ)

மன்னுயிர்க ளியாவும் மணியுதரத் தட்சுமந்து
முன்னரிதி னீன்ற முதுசெல்வ மக்களென
வுன்னி யுலகிற் குறுதுயர்கண் டுள்சாம்பி
யன்னை யுலந்தா யெனக்கேட் டழியாரார்? (கூ)

## ஷை வேறு.

ஆங்கிலவாண் டாயிரமே லமைந்ததொளா யிரத்தொன்றி
லோங்குஜன வரிமாதத் துயரிருபா னிரண்டதனிற்
ருங்கியவிப் புவிச்சுமையைத் தனதெண்பா னிரண்டாண்டி
லீங்கொழித்தெங் கேகினையோ வெம்மிரக்கங் காணுதே? (க0)

கண்ணிழந்த தவனியெலாங் களியிழந்த துயிர்களெலாம்
மண்ணிழந்த துன்கருணை மணமிழந்த மலரேபோற்
பெண்ணிழந்த தரசினிமேற் பெயரிழந்த துன்னாழி
விண்ணிழந்த துன்கொடியை வினையிழந்த தெவ்விடனும். (கக)

அசலாம்பிகையம்மாள்.

---

## அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

எல்லையிலா வகண்டவெளி தனிலமையுமைம்பூத மெங்குஞ் சேர்ந்து
பல்லுருவா யண்டங்கள் பலவாகி யவற்றிலுயிர் படைத்து மீண்டு
மில்லையெனச் சிதைத்தழிக்கு மிறைவநங்கட் புலன்ருேன்ருே திசைந்துநிற்க
வல்லையெம தன்புமிகு வான்பதியே யெமக்கியைந்த வருத்த நீகேள். (க)

வாரிதனி லோர்துளியோ மணல்வனத்தி லோரணுவோ மதிப்பி னிந்தப்
பாரிதனின் மனுக்குலத்தோர்படுந்துயரைபென்னென்பேன்பைங்கூழ்நல்ல
மாரிதனிற் செழித்தோங்கி வறப்புறவே வாடுகின்ற வகையே போன்று
சீரியநல் லறந்தழைக்கப் படிபுரந்த மாராணி சேர்ந்தாள் வீடே. (உ)

வீடடைந்தாளிகச்செல்வம் விட்டகன்ருளோய்வின்றி வெய்யோன் காக்கும்
நாடடைந்த பெரும்பேறுமவளோச்சும் செங்கோன்மை நவிலப் போமே
காடடைந்தார் வீடுதனைக் கண்டடைந்தார் கொடுங்கோலாற்கலங்கியன்ருண்
மாடடைந்த பலவரசர் வனசமெனக் கதிரோன்முன் மகிழ்ந்து வாழ்ந்தார்.

---

* மெய்சுருங்க சூரியன் நாளொன்றிற்கு 9 அங்குலம் தனது சுற்றளவிற் சுருங்கி வருதலை யுணர்த்தியபடி.

செல்வநிறை யாங்கிலமென் றேசமதின் முன்னுதித்துச் சிறந்ததானைப்
பல்விலைய முத்தளிக்கும் பரவைசூ ழுலகிலொளி பரக்க வீசி
நல்வளமுற் றுயிரோம்ப வறுபத்து மூவருடம் நாப்பணின்று
கொல்வினைஞர் பனிதவிர்த்துப் பகலரசியத்தமித்த கொடுமை என்னே? (ச)
என்சொல்வேனவள்புரந்த நாவலந்தீ வதனின்முன் னிடையூ றந்தோ
முன்செய்த நாற்சாதி பகைவிளைக்கத் தமைக்காக்கும் மொய்ம்பொன் றின்றி
மன்செலுத்துங் கோன்முரணி மகம்மதிய தியரசர் வசத்தி னுற்று
வன்சொலொடு மறமியற்று மகராட்டி ரருமதையே வதைத்தார் மிக்க.(ரு)
கடும்புயலில் வேலையிடைக் கரைகாணு மரக்கலமோ! காட்டில் வாழுங்
கொடும்புலிகைப் புல்வாயோ கொல்லரிமுன் மதக்களிறோ குரங்கு கைசேர்
தொடுமலர்த்தாரொத்ததெனச் சொலற்குரிய விந்நாட்டின் துன்ப நீத்த
நெடுமுடிசூழ் பெண்ணரசே நினையிழந்த துயரெமக்கு நீங்கா தம்மா. (சு)
மகமதிய ரெனுமுழுவை யிந்துவெனும் பசுவினொடு மகிழ்ந்து வாழ
அகமகிழ்வெய் திடப்பொருளோ டாருயிரி னிடர்நீக்கி யாண்ட வெங்கள்
சகம்புகழும் பேரரசே தாயற்றோர்க் கோர்துணையே தவிர்த்தோர்க் கென்றும்
முகமலர வீந்தருளு முளரிமலர்த் திருமகளே முடிந்தாய் மண்மேல். (எ)
தன்மகனைக் கான்செலுத்தித் தசரதனு முயிர்விடுத்தான் சகியா தன்று
நின்பதியோ டிறவினரும் நின்மதலை தருசேயும் நின்முன் மாண்டும்
அன்புமிகு தாயகமே யகத்தெழுநின் றுயரடக்கி யயலார்க் குற்ற
துன்பமதைக் கண்டிரங்கித் துயர்களைநின் பேராற்றல் சொல்லப் போமோ.

வேறு.

பொன்னுடைக் குன்றஞ் சூழும் புகழிந்து தேச மெங்கும்
மன்னுயி ரோம்பிச் சக்ர வர்த்தினி யெனும்பேர் பூண்டாய்
மின்னுறு யாக்கை நீத்து விண்ணவ ரிடுக்கண் டீர்க்கப்
பொன்னுல காட்சி பெற்றுப் போயினை போலு மம்மா. (கூ)

எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

பதிதா னிழந்துலகி றனியே யுழன்றரசி படிமீதுருண்ட வதுதான்
புதிதோ விளம்புமிடை முடியே அரிச்சந்திரசர் புகழோ டிருந்த முதல்வன்
எதுவோ விதித்ததுதன் படியே நடப்புறுமிங் கெவரே தடுப்பதிவணிக்
கதியே யெமக்குவரு மெனவே திடப்படுமின் கடைநாள் வரும்மளவுமே. ()

நேரிசை வெண்பா.

பெண்ணரசி மாண்டுமவள் பெற்றெடுத்த நற்புதல்வன்
மண்ணரச ரிற்பெரிய மாராயன்—றண்ணளிசேர்
ஏழாவ தாங்கணக்கில் எட்வார்டெனும்பூபன்
ஏழைக்களுக் கோர்துணையா மீங்கு. (கக)

சா. சோமசுந்தரம் பிள்ளை.

## அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

பெண்ணெனினு மாணெனினு மறிவி லுயர்ந் தாலரசு பெறலா மென்னத்
திண்ணமிகு நிலவுலகி லரசுரிமை பெற்றுயர்ந்த செங்கோ லோச்சித்
தண்ணளியா லுயிர்களெலாங் காத்தருளுந் தயாநிதியே சமான மில்லா
வண்ணமணி முடிபுனைந்த விக்டோரி யாளெனும்பேர் வாய்ந்த மாதே. (௧)

என்றானுங் குறையின்றிக் கல்வியினாற் கேள்வியினா லொழுக்கத் தாற்பொற்
குன்றாமென் னுங்குணத்தா [illegible]ன் முயற்சியினாற் குறிக்கு மன்பா
னன்றாரு மகப்பேற்றாற் ம கண்மையினாற் கொடையினா னலத்தால் யார்க்கு
முன்றானென் றிடமருடந் தரித்தரசாண் டிருந்தனைநின் முறைநன் றாமே.()

பாரிடத்திற் சிறந்தலண்டன் பட்டணமே நீவாழும் பதியாக் கொண்டாங்
கோரிடத்தி லிருந்தாலுங் கீர்த்தியினா லுன்குடைக்கீ ழுறைவார் நெஞ்சாஞ்
சீரிடத்தெல் லாமிருந்தாய் நின்போற்செங் கோன்முன்னஞ் செலுத்து மன்ன
ராரிடத்து நின்னரசாட் சியிற்கண்ட வற்புதங்க ளறிந்தி லோமே. (௩)

அற்புதத்தின் வகைகளென்னென் றெடுத்துரைப்பே மாயினுஞ்சற் றறைவா
சொற்..னத்துங்கண்டறியாத்தந்திதபால்மின்சாரச்சுடர்விளக்கு [முன்னாட்
சுற்புறவான் பறந்துசெலும் புகைக்கூடு திசைகாட்டுங் கருவி யாதி
பற்பலயந் திரமின்னும் யாங்கள்கேட் டறியாப்பற் பலவு மன்றே. (௪)

அரசுபெற்ற நாண்முதலா விதுகாறும் பகைவர்வலி யடக்கி யாண்ட
திரமைமிகு செயசாலி யாயிருந்தா யஃதுநின்பேர் செப்பும் யார்க்கும்
வரபலமோ நீசெய்த மாதவமோ விவையுனக்கு வாய்த்த வாறு
விரசுபெருங் கற்புடைய விக்டோரி யாளெனும்பேர் மிளிர்கோ மாதே. (௫)

மண்ணுலகத் தினிலரசு புரிந்துயிரெல் லாம்புரந்த வண்ணம் போல
விண்ணுலகத் தினும்புரக்கச் சென்றனையோ விஃதன்றி வேறா ரேது
வெண்ணுவதற் கிடமிலையே யெங்களைக்கை விட்டகலற் கிணையி லாத
பெண்ணுருவப் பேரரசே விக்டோரி யாளெனும்பேர் பெற்ற தாயே. (௬)

துட்டரெனும் பெருஞ்சுமையைத் தொலைத்தருணின் னீதியினாற் றூய கற்பா
லிட்டமுறும் வேளையெலா மழைபெயச்செய் துடல்குளிர்வித் திட்ட நின்னை
யெட்டனையா வதுமறந்து பிரிந்திருக்க முடியாமை யெண்ணி யிப்பார்
பட்டநின்சீ ருருத்தன் னுள்ளடக்கிக் கொண்டதந்தோ பயில்கோ மாதே.()

ஒருமகவைப் பிரிந்தாலு முடல்பதைத்துத் தாய்தேடி யோடி யன்பால்
வருதலுல கியற்கைபன்னா ளுன்குடைக்கீழ் வாழனந்த மகவா மெங்க
ளருமைபா ராட்டியுள மகிழாது பிரிந்தனைநீ யந்தோ யாங்கள்
தருமதயா நிதிவாவென் றழைத்தாலும் வாராய்நின் றயைபயீ தென்னே.(௮)

துன்னருந் தொழத்தகுநின் றண்ணளியின் குணங்களெலாந் தொகுத்தன்
பன்னாளு முன்னுடனே பழகியவர் கடிதத்தாற் பலவா ருகச் [பாகப்
சொன்னார்கள் கேட்டதன்றிக் காணுநாம் நினைப்பிரிந்த துயராற் றேமே
லென்னுவர் கண்டவர்க ளங்கோநீ யரசிருந்த வியற்கை நன்றே. (௬)

பின்னுமன்பா லொருவாறுதெளிவடைந்தோந் தாயைப்போற்பிள்ளையென்ன
மன்னுமொரு பழமொழியுண் டதற்கேற்ப நீபெற்ற மைந்தன் ருனு
மென்னுமிள வரசேநின் பேரரசைத் தாங்கியிருந் திடலா லென்றுந்
துன்னுபுகழ் பெறுசக்ர வர்த்தினிநீ யானந்த சுகியாய் வாழி. (௭)

மு. ரா. அருணுசலக்கவிராயர்.

## சமாசாரங்கள்.

**அறிவு விளக்கம் :**—இப்பெயர் கொண்டதோர் மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை திருவனந்தையினின்றும் பிரசுரிக்கப்படுகிறது. 24 பக்கங்கொண்டது. ஸ்ரீ வள்ளல் சோ. சிவஞானதேசிகர் என்பவர் பத்திராதிபராக வெளியாகின்றது; அரும் பெரும் பொருள்களைப்பற்றி விரித்துக்கூறும் இத்தகைய பத்திரிகைகள் நாளும் பல்குவனவாக.

***

**மகாராணியவர்கள் ஞாபகச்சின்னம் :**—இது விஷயமாசச் சேரும் பணங்கொண்டு வைத்தியசாலை வைக்கவேண்டுமென்றும், பெண்கல்வி விருத்திக் குரிய பெருவழிகளை நாடவேண்டுமென்றும், கனம் பொருந்திய **டாடா** அவர்களது ஆராய்ச்சிச் சாலையைப் பலப்படுத்த வேண்டுமென்றும், சுதேச பாஷைகளில் மகளிரைக்கொண்டே அரசியார் சரிதத்தைக் காப்பியம் பெழுதுவித்தல் வேண்டுமென்றும், பொருட்காட்சிச்சாலை பேற்படுத்தவேண்டுமென்றும், நற்கலைக்கழகமுங் கைத்தொழிற் சாலையும் இந்தியாவில் ஆங்காங்கு ஏற்படுத்த வேண்டுமென்றும் பலர் பலவிதமாகக் கூறுகின்றனர். இவற்றுளொவ்வொன்றும் ஒராற்ருலேற்புடைத்தாமாறு காண்க.

***

**தென்னுப்பிரிகா யுத்தம் :**—இவ்யுத்தத்தில் இதுவரைக்கும் செலவான பணம் 810-லட்சம் பவுன், அஃதாவது $121\frac{1}{2}$ கோடி ரூபாயாம். வாரமொன்றுக்கு 12-லட்சம் பவுன், அஃதாவது 180-லட்சம் ரூபாய் செலவாகின்றனவாம். சென்ற $1\frac{1}{2}$-வருடமாக நடந்துவரும் இவ்யுத்தம் கடிதில் நின்றுவிடுமென்றும் போவர்கள் நம் ஆங்கிலர்களைச் சரணடையப் போகிருர்களென்றும் பத்திரிகைகள் கூறுமாறு, யாண்டும் போர்நின்று யொறைமல்குக.



மகாதேவ கோவிந்த ரானடே.